303
ஜாதிதத்வநிரூபணம்

ஸ்ரீரஸ்து ॥

ஜாதிதத்வ நிரூபணம்.

இது தக்ஷிணபாரததர்மமண்டலத்தின் கௌரவ
உபந்யாஸகரான கும்பகோணம் வித்வான்
அக்னிஹோத்திரம்
கோபாலதேசிகாசாரியரால்,

இயற்றப்பட்டது.
ஸ்ரீமான் தர்மவிநோத
டி. வி. ஸாமிநாதய்யர் பி. ஏ. எல் டி.

அவர்கள் எழுதிய முகவுரையுடன்
தக்ஷிணபாரததர்மமண்டல ஸபையாரால்,
கும்பகோணம்
சாரதா விலாஸ அச்சுக்கூடத்தில்

அச்சிட்டு கும்பகோணத்தில் பிரசுரிக்கப்பட்டது.
ஸித்தார்த்தி-ஹு பங்குனி-மீ
1920.

இதன் விலை அணா 6.

ஸ்ரீரஸ்து ॥

ஜாதிதத்வ நிரூபணம்.

இது தக்ஷிணபாரததர்மமண்டலத்தின் கௌரவ
உபந்யாஸகரான கும்பகோணம் வித்வான்
அக்னிஹோத்திரம்
கோபாலதேசிகாசாரியரால்,

இயற்றப்பட்டது.
ஸ்ரீமான் தர்மவிநோத
டி. வி. ஸாமிநாதய்யர் பி. எ. எல். டி.

அவர்கள் எழுதிய முகவுரையுடன்
தக்ஷிணபாரததர்மமண்டல ஸபையாரால்,

கும்பகோணம்
சாரதா விலாஸ அச்சுக்கூடத்தில்

அச்சிட்டு கும்பகோணத்தில் பிரசுரிக்கப்பட்டது.

ஸித்தார்த்தி-ஸ்ரீ பங்குனி-மீ
1920.

இதன் விலை அணு 6.

ஸ்ரீ:

விஷயஸூசிகை.

		பக்கம்.
சரித்திரங்களும் ஜாதிபேதமும்.	... ...	2
வேதங்களில் ஜாதிபேதத்தைப்பற்றிய விவரணம்.	...	10
புருஷஸூக்தம் கல்பிதமன்று.	... ...	10
பூர்வபக்ஷிகளின் ஆக்ஷேபங்கள்.	... ...	15
ஆக்ஷேபங்களுக்கு பதில் (கீதா சுலோகார்த்தம்)	...	17
ஜாதிபேதம் இயற்கையானது.	... ...	19
ஜாதி குணத்தை யநுஸரித்ததென்பதில் தோஷம்.	...	22
ஜந்மநா ஜாயதே, என்கிற சுலோகார்த்தம்...	...	23
சூத்ரயோநௌ, என்கிற சுலோகார்த்தம். ...	...	28
ஜந்மாந்தரத்தில்தான் ஜாதிமாறும்.	... ...	29
ஜாதிமாறுதென்பதற்கு உதாஹரணம்.	... ...	32
வைஷ்ணவஸம்பிரதாயமும் ஜாதிபேதமும். ...	...	32
மேல்ஜாதி கெட்டகாரியத்தாலும் மாறுது. ...	...	36
விச்வாமித்திரருக்கு ஜாதிமாறியவிஷயம். ...	...	40
மூன்னோர்களுடைய துராசாரத்தை நாமும் அனுஷ்டிக்கக்கூடாது.	... ...	43
சில ரிஷிகளின் உத்பத்திக்கு ஸமாதானம்.	...	46
ஜாதிபேதத்தால் தேச க்ஷேமத்திற்கு கெடுதியில்லையென்பது.		48

இப்புத்தகம் திருச்சி தெப்பக்குளம் ஆரியதர்ம ஆபீஸிலும், கும்பகோணம் அய்யங்கார் தெரு ஆஸ்திகபாலஸமாஜத்திலும் கிடைக்கும்.

முகவுரை.

[illegible]த பரதகண்டத்தில் ஆதிகாலத்தில் ஜாதிவேற்று
மை இரு[illegible]இல்லையென்றும், அது பிற்காலத்தில் மனிதர்க
ளா[illegible]தப்பட்டதென்றும், அது சுருதியின் கருத்தல்ல
வென்று[illegible]ருதிகளிலும், புராணங்களிலும் மட்டும் காணப்
படுவதெ[illegible]றும், ஜாதிவித்யாஸங்களால் தான் இந்தியாவானது
தற்காலம் [illegible]ாகரிகம் குன்றி மேல்நாடுகளைப்போல், ஸ்வாதந்திரி
யமில்லாம[illegible] தபிக்கிறதென்றும், இனி தேசக்ஷேமமுண்டாகவே
ணுமானல் ஜாதியே அடியோடு ஒழியவேணுமென்றும், அன்
நியமதஸ்த[illegible]கள் நம்மைக்குறைகூறுவது ஒருபுறமிருக்க, நம்மில்
லௌகிகத்தில் பெரிய அந்தஸ்துள்ள கனம் ஜஸ்டிஸ் சேஷகிரி
அய்யர், கனம் ஜஸ்டிஸ் ஸதாசிவய்யர், வக்கீல் எஸ். ஸ்ரீநிவாஸ
அய்யங்கார் போன்றவர்களும், ஜாதியானது ஒழிந்துபோகவேண்
டுமென்று இடைவிடாது வெகு ஊக்கத்துடனும், தேசபக்தி
யுடனும் வற்புறுத்திவருகிறார்கள்!! அவர்கள் சிலஸமயத்தில்
தங்களுக்கு ஸௌகரியமாக சாஸ்திரத்தைப் பிரமாணமாகவும்,
வேறு சிலஸமயத்தில் அதை நிராகரித்தும் வருகிறார்கள். சாஸ்
திரத்தையே விட்டு அவர்கள்சொல்லும் விதிக்கு, அவர்களே பிர
மாணம் என்று சொல்லுவதுபோலிருக்கிறது. அப்படியானல்
அவர்களுக்கும் நமக்கும் கக்ஷியில்லை. அப்படியின்றி தாங்கள்
சொல்லும் ஆசாரத்திருத்தத்திற்கு சாஸ்திரமே பிரமாணமென்
று ஸாதிப்பார்களானல் வர்ணச்ரமிகளான நாம் அவர்களுக்கு
சாஸ்திரம் இடம்கொடுக்கவில்லை என்பதை விளக்கிக்காட்ட முன்
வந்திருக்கிறோம். இவர்கள செய்துவரும் ஜாதிதூஷணம் புதி
தல்ல. பௌத்தர்களைவிட புத்திசாலிகளான ஹிந்துமதாசாரதூ
ஷகர்கள் ஒருகாலத்திலும் உண்டாகப்போகிறதில்லை. அவர்கள்
செய்யாத ஆக்ஷேபங்களுமில்லை. இம்மாதிரியான துராக்ஷேப
மானது சில சிறுவர்களுடைய மனதையும், அறிவில்லாத மாந்
தர்மனதையும் ஒரு ஸமயம் கலக்கஹேதுவானலும், புத்திமான்
களும், சாஸ்திரவச்யர்களும் ஒருபோதும் இதை நம்பி வர்ணச்
ரமதர்மத்தைக் கைவிடார்கள்.

வர்ணச்ரமதர்ம ஸம்ரக்ஷணத்திற்காகவே ஸ்ரீகாசியில்

அனேக மஹாராஜாக்களும், மதாசாரியர்களும் வித்வா[illegible]களும் சேர்ந்து "ஸ்ரீபாரததர்மமஹாமண்டலம்" என்[illegible] ஸபையை ஸ்தாபித்து ஒவ்வோரிடத்திலும் நூற்றுக்கண[illegible]ன சாகா (கிளை) ஸபைகளை ஏற்படுத்தி வர்ணாச்ரமதர்மம் ந[illegible]லிக்கப்பட்டுவருவதுடன் பற்பல ஜாதியரான லக்ஷக்க[illegible]ன ஹிந்துக்களை அதை யநுஸரித்து நடக்கும்படியும் நல்லவே[illegible]செய்து வருகிறது. முக்கடவுள் ஏற்படுத்திய வர்ணாச்ரமதர்ம[illegible]தை மூன்றுமனிதர்கள் சேர்ந்து அழிக்கமுடியாதென்பது சொ[illegible]ல்லாமலே விளங்கும். ஆயினும் வர்ணாச்ரமிகளாகிய நாம் ஆபாஸ[illegible]மானயுக்திவாதங்களையும் கண்டிக்கவேண்டியது அவசியம். அ[illegible]விதம் செய்யாமல் போனால் நமது கக்ஷி சரியல்லவென்று பாமரஜனங்கள் எண்ணிவிடுகிறார்கள்.

இதையுத்தேசித்தே பிரகிருதத்தில் நமது தக்ஷிணபாரததர்மமண்டலத்தின் கௌரவ உபந்யாஸகரான ஸ்ரீமான் அக்னிஹோத்திரம் வித்வான் கோபாலதேசிகாசாரியர் அவர்களால் இயற்றப்பட்ட "ஜாதிதத்வநிரூபணம்" என்கிற கிரந்தத்தை தக்ஷிணபாரததர்மமண்டலஸபையார் அச்சிட்டு பிரசுரித்திருக்கிறார்கள். இக்கிரந்தமானது கும்பகோணம் விசிஷ்டாத்வைத ஸபையில் கொடுக்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலாக எழுதப்பட்டு பலவித்வான்களால் சிலாகிக்கப்பெற்று உத்தமஸம்மானம் அளிக்கப்பெற்றது. இங்கு ஜாதிஅனாதியென்றும், அது ஈச்வரனாலேயே கல்பம் தோறும் முன்போல உண்டுபண்ணப்படுகிறதென்றும், சுருதி, ஸ்மிருதி முதலிய பிரமாணங்களைக்கொண்டு ஸித்தாந்தம் செய்யப்பட்டு சொற்சுவை பொருள் சுவை நிரம்ப, எளியநடையில் லோகோபகாரமாயும், மித்யாவாதகண்டனமாயும் எழுதப்பட்டிருப்பதால் இதனால் சஞ்சலாத்மாக்களின் ஸந்தேஹங்கள் தெளிவதோடு, தூஷகர்களும் தலை கிளப்பமுடியாமல் போகநேரிடுமென்றும் நான் அபிப்பிராயப்படுகிறேன்.

தர்மவினோத

தக்ஷிணபாரத தர்மமண்டலம், திருசிரபுரம்.
15—3—20

டி. வி. ஸாமிநாதய்யர்,
பி. ஏ. எல். டி.
காரியதரிசி.

॥ श्रीः ॥

श्रियै नमः ॥

॥ जातितत्वनिरूपणम् ॥

ஜாதி தத்வ நிரூபணம்.

ஓம். இந்த வியாஸத்தை நாம் எழுத ஆரம்பிக்கு முன் ஜாதிவிஷயமான ப்ரச்னங்களைக் கொடுத்த மஹான்களுக்கு ஓர் விண்ணப்பம் செய்துகொள்ள விரும்புகிறோம்.

நம் தேசத்தில் ஜாதி விஷயமான சச்சரவுகளும், வாதப்பிரதிவாதங்களும் புதிதல்லவாயினும் முன் காலத்தில் ஏற்பட்டிருந்த துர்வாதங்களுக்கு நம் பெரியோர்கள் கிரந்தங்கள் மூலமாகப் பல ஸமாதானங்களைச்சொல்லி நிலைமையை சாந்தப்படுத்தி விட்டிருந்தார்கள். அது முதலாக நமது தேசமும் சாந்தமான நிலைமையில் இருந்து வந்ததாகவே ஸ்ரீராமாயணாதி சரித்ரங்களிலிருந்து தெளிவாக அறியக்கிடக்கின்றது. அப்படியிருக்க, ஸமீபகாலந்தொட்டு "ஆசாரத்திருத்தக்காரர்கள்" என்று பல புத்திமான்கள் வெளிப்பட்டு, விவாதத்திற்கிடமாகப் பல விஷயங்களைக் கிளப்பிவிட்டதுபோல் ஜாதி விஷயமாகவும் அவர்கள் அனேக விவாதங்களைக் கிளப்பிவிட்டிருப்பது வெகு பிரஸித்தமான விஷயம். அத்தகைய திருத்தக்காரர்களுடைய வாதங்களுப் பலவிதமாக அங்காங்கு பதில் சொல்லப்பட்டிருப்பினும், இக்கேள்விகள் மூலமாகவும் தகுந்த ஸமாதானங்களை வெளிப்படுத்தவேண்டுமென்கிற நோக்கமும், பிரகிருத பிரச்னங்களைக்கொடுத்தவர்களுக்கு இருக்கலாமென்று தோன்றுவதால், ப்ரகிருத கேள்விகளுக்கு ஸமாதானம் சொல்வதுடன், திருத்தக்காரர்களுடைய

ப்ரமாண, யுக்திகளுக்கும் அங்காங்கு தெரிந்தமட்டி[illegible]தில் கூற வேண்டுமென்று நினைக்கிறேன். தத்காலம், ஜா[illegible]டியமாக திருத்தக்காரர்களுடைய கூச்சல் எங்கும் பரவி[illegible]வதாலும், அதற்கு பதிலளிக்க பிரகிருத கேள்விகளில் நல்ல [illegible]தர்ப்பங்க ளிருப்பதாலும், ஸமாதானம் சொல்லுவதால் சிறி[illegible]வது நமது ஸமூஹத்திற்கு நன்மை ஏற்படலாமென்று தோன்றுவதாலும், மஹான்கள் என்னுடைய பிரவிர்த்தியை க்ஷமித்து அநுக்கிர ஹிப்பார்களென்றே நம்புகிறேன்.

சரித்திரங்களும் ஜாதிபேதமும்.

பிராம்மண, க்ஷத்திரிய, வைச்ய, சூத்திர, ரென்கிற நான்குஜாதிகளும், அததற்குறியகுணம், தொழில் முதலியவைகளுடன் ஈச்வரனல் ஸிருஷ்டிசெய்யப்பட்டு அநாதிகாலமாயிருந்து வருவதாகவே ஹிந்துக்களுடையபிரமாணக்ரந்தங்களாகிய சுருதி, ஸ்மிருதி முதலியவைகளிலிருந்து ஸ்பஷ்டமாக வெளியாகிறது. இதற்கு மாறுகத்திருத்தக்காரர்கள் ஜாதிபேதங்கள் ஆதிகாலங்களில் கிடையாதென்றும் பின்னல் அதாவது ஆரியர்கள் மத்ய ஏஷ்யாதேசத்திலிருந்து இந்தியாவில் குடியேறியபிறகே ஏற்பட்டனவென்றும் வாதித்துவருகிறார்கள். இவர்களுடைய வாதத்திற்கு அனுகூலமாக ரிக்வேதம் முதலியவைகளிலிருந்து விபரீத பிரமாணம் ஏதோ எடுத்துக் காட்டப்படுகிறதுடன் விசேஷமாகத்தற்போதியமேதாவிகளால் எழுதப்பட்ட தேசசரித்ர க்ரந்தங்களே முக்கிய ஆதாரங்களாகத் திருத்தக்காரர்களாலும் மற்றவர்களாலும் எடுத்துக் காட்டப்படுகிறது. ஹிந்துதேசசரித்திரத்தை எழுதிய ஐரோப்பியர்கள் பலரும் சில ஹிந்துக்களும் ஜாதிவ்யவஸ்தைகள் வேதகால இந்தியாவில் கிடையாதென்றும் அதனலேயே அக்காலத்தில் ஜாதிபேதமற்ற விவாஹாதிகாரியங்கள் ஸாதாரணமாய் நடந்து வந்தனவென்றும் தைர்யமாய் எழுதிவிட்டார்கள். இவ்விஷயங்களைப் பற்றி ஹிந்துதேசசரித்திரம் எழுதுவதையே ஜீவனமாகக் கொண்ட ஈ மார்ஸ்டன் என்கிற

ஆங்கிலே... தமது சரித்திரப்புஸ்தகத்தில் சொல்லியிருப்பதை நாம் ...னிக்கவேணும். அவர் தனது கிரந்தத்தில் பின்வருமாறு ...லுகிருர். “வேதகாலத்தில் ஜாதிபேதங்கள் கிடையாது. அ...ர்களுடைய தொழிலை அனுஸரித்தேஜாதிஏற்பட்டதாகத்தெ...கிறது. ஒரேகுடும்பத்தில் ஒருவன் பிராம்மணனுகவும் மற்றொருவன் க்ஷத்திரியனுகவும் தொழிலையனுஸரித்து வ்யவஹரிக்கப்பட்டு வந்தார்கள். இவ்விஷயத்திற்கு அடியில் குறிப்பிட்ட ரிக்வேதமந்திரமானது பிரமாணமாய் விளங்குவதைக் காணலாம். அதாவது—

कारुरहं ततो भिषगुपलप्रक्षिणीनना ।
नानाधियो वसूयवो नुगा इव तस्थिमेन्द्रायेन्दो परिस्रव ॥ १०-४-११२

ஒருரிஷிசொல்லுகிருர்—“நான் கவி அல்லது சில்பியாக விருக்கிறேன். என்னுடைய பிதா வைத்தியர். என் தாய் மாவு அரைப்பவள். இப்படியாக நாங்கள் திரவிய ஆசையால் நாநாவிதத் தொழில் உள்ளவர்களாக விருக்கிறோம். இந்த மந்திரத்தின் அர்த்தத்தை ஊன்றிப்பார்த்தால் நாம் கீழ்ச்சொல்லியது நன்ருக விளங்கும்” இவ்வாறு மார்ஸ்டன் என்பவர் சொல்லுகிருர். இதுபோல் மாக்ஸ்முல்லர் ஸர் ஆல்ப் ரெட்லயன் ஆர் ஸி தத்தர் முதலியவர்களும் பற்பல ஊஹங்களைக் கொண்டு ஜாதிபேதம் பின்னுல் கற்பிக்கப்பட்டதென்று விமர்சிக்கிருர்கள். இவர்களுடைய விமர்சநபாண்டித்யத்தைப் பற்றி நாம் ஒன்றும் சொல்லவேண்டியதில்லை. இதை பிரமாணசரணர்களான ஆஸ்திகஹிந்துக்கள் எக்காலத்திலும் ஒப்புக்கொள்ளமுடியாது. நமது பிள்ளைகள் வேறுவகையன்றி இவ்விதசரித்திரக்கதைகளைப்படிக்கநேரிட்டாலும் இவைகளில் சொல்லப்பட்டுள்ள விஷயங்கள் எல்லாவற்றையும் நாம் நம்பிவிடுவதற்கில்லை. அதிலும ஜாதிபேதவிஷயத்தைப் பற்றிய முக்கியமான விஷயத்தில் இச்சரித்திரங்களை நம்பி நாம் ஏமார்ந்துபோகக்கூடாது. தவிரதத்காலம் வழங்கிவரும் சரித்திரப்புஸ்தகளெல்லாம் அநேகமாக நமது மதரகஸ்யங்களை எவ்விதத்திலும் அறியச்சக்தியற்றவர்களும் நம்முடன் நல்லபழக்கமற்றவர்களு

மான் விஜாதீயர்களாலேயே எழுதப்பட்டன வாகை... இவை நமது நாகரிகமேன்மைகளை வெளியிடக்கூடியவையல்... வென்றும் தேசமெங்கும் பலபுத்திமான்கள் இப்போது வெளிய... சொல்லி வருவதையும் இங்கு மறக்கக்கூடவில்லை. "ஸ்... விவேகாநந்தர்" என்பவர் அமெரிக்காதேசம் சென்றிருந்தபோது அங்குள்ள பாடசாலைகளில் ஹிந்துசரித்திரஙகள் போதிக்கப்பட்டுவருவதைப் பார்த்து வெகு வருத்தமும் கோபமும் அடைந்தாராம். ஹிந்துஸ்திரீகள் தங்களது குழந்தைகளை உயிருடன் நதியில் போடுவது போலவும், ஹிந்துக்கள் தங்களது ஸ்திரீகளைக் கத்திகொண்டு வெட்டுவதுபோலவும், இன்னுமிம்மாதிரி பல அநாகரிகங்களை வெளிடபடுத்தக்கூடிய சித்திரப்படஙகளுடன் நமது சரித்திரங்கள் அங்கே போதிக்கப்படுகின்றனவாம். தவிற இரண்டொரு வருஷங்களுக்கு முன் சீமையில் சென்னை பாரிஸ்டரொருவர் ஏதோ உபந்யஸித்துக்கொண்டிருக்கும்போது பல ஆங்கிலேயர்கள் அவரைப்பார்த்து "இந்தியாவில் நீங்கள் குழநதைகளை உயிருடன் ஆற்றில் போடுவது வழக்கமுண்டா" வென்றுகேட்டார்களாம். அதற்கு "இந்தியாவில் குழந்தைகளை ஆற்றில் எறிந்துவிடுவது வாஸ்தவமானல், எத்தேசத்திலும் காணமுடியாத ஜனத்துகை இந்தியாவில் இருக்கமுடியுமாவென்று யோசியுங்கள்" என்று அக்கிணற்றுத்தவளைகளுக்கு அவர் பதில் சொன்ஞராம். இத்தகைய கட்டுக்கதைச் சரித்திரங்கள் இந்தக்ஷணத்தில் கூட நமது பாடசாலைகளில் கற்பிக்கப்பட்டுத் தான் வருகின்றன. இதனடியாக ஸம்பவிக்கும் அநர்த்தமென்ன வென்பதை நாம் சொல்லவேண்டியதில்லை. வாஸ்தவத்தை யோசித்துப்பார்த்தால் இம்மாதிரி குழந்தைகளைக் கொல்லும் க்ரூரகாரியம் நமது தேசத்தில் எக்காலத்திலாவது நடந்ததாக நமது புராணதிகளிலிருந்து வெளியாகின்றதா? ஒருக்கால் ஸகரபுத்திரன "அஸமஞ்ஜன்" என்பவன் இம்மாதிரி காரியங்கள் செய்ததாக ராமாயணத்திலிருப்பதை ஆதாரமாகக்கொண்டு சரித்திரக்காரர்கள் சொல்லுவார்களானல் அது மிகவும் தகாதது. அவன் குற்றவாளியென்று தேசப்பிரஷ்டம் செய்யப்படவில்லையா? தவிர

ஒரு தே[illegible]தில் யாரோ இரண்டொருவர் தகாதகாரியங்களைச் செய்தத[illegible]க தேசம் முழுவதிலும் இம்மாதிரி காரியம் உண்டென்[illegible]த்துணிந்தது எப்படி? இரண்டொருவருடைய காரியத்[illegible] தேசம் முழுவதும் ஜவாப்தாரியாகமுடியுமா? இங்கிலாந்தில் ஒருகாலத்தில் முதலாவது "சார்லஸ்" என்கிற அரசன் சில ஜனங்களால் கொல்லபபட்டுப் போனான். இதைக்கொண்டு அத்தேசஜனங்களுக்கே ராஜவிச்வாஸம் கிடையாதென்று எந்த மூடனாவது சொல்லத்துணிந்துவிடலாமா? ஆகையால் ஸ்வாமி விவேகாநந்தர் சொல்லியபடி இந்தியாவிலிருந்து திரும்பிப்போகும் கெட்டஎண்ணங்கொண்ட சில பாதிரிகளும் சிவிலியன்களும் கொடுக்கும் தப்பான முகாந்திரங்களையே முக்கிய ஆதாரமாகக் கொண்டு ஹிந்துக்களுடைய நாகரிகங்களையும் மதரஹஸ்யங்களையும் கீழ்படுத்தும் நோக்கத்துடன் எழுதப்பட்ட இம்மாதிரி சரித்திரங்களை நாம் முழுவதும் நம்பிவிடுவதற்கில்லை. இப்படி கீழ்ச் சொல்லியபடி நமது கௌரவத்திற்கும் நாகரீகத்திற்கும் கல்மஷத்தை யுண்டாக்கக்கூடியதும், எவ்வித மூலப்பிரமாணமற்றதுமான காரியங்களை நமது தலையில் சுமத்தத்துணிந்த "மார்ஸ்டன்" போன்றவர்கள் அநாதியான ஜாதிபேதத்தைப் பற்றி நமது பிரமாணங்களுக்கு நேர் விரோதமாக எழுதியிருப்பதை நாம் எக்காலத்திலும் நம்பமுடியாது. மத்யஏஷ்யாவிலிருந்து வந்தபிறகே ஜாதிபேதமேறபட்டதாகச் சொல்லுகிறார்கள். மத்ய ஏஷ்யாவிலிருந்து வந்து குடியேறியதாகச்சொல்லும் கதையே பிரமாணமற்றதென்று, ஹிந்துக்களாலும், ஐரோபபியர்களாலும் கொண்டாடப்பட்ட பாண்டித்யமுள்ளவரும் லோகமான்யரென்று கியாதிபெற்றவருமான ஸ்ரீமான் பாலகங்காதர திலகர் பல பிரமாணங்களுடன் வெளியிட்டிருக்கிறார். இதற்கு சரித்திரக்காரர்கள் என்ன பதில் சொல்லப்போகிறார்கள்? இவ்விஷயத்தைப்பற்றி நவீனசரித்ரவிமர்சகர்களுக்குள்ளேயே பலமான அபிப்பிராய பேதங்களிருப்பதையும் நாம் மறந்துவிடுவதற்கில்லை. ஆர்யர்கள் மத்ய ஏஷியாவிலிருந்து கிளம்பி இந்தியாவில் குடியேறியதுபோல் அவர்களில் பலர் மேற்குமுகமாய்ச் செ

ன்று இடாலி, பிரான்ஸ், ஜெர்மனி, பிரிட்டன்முதல தேசங்களிலும் குடியேறி அங்கெல்லாம் தங்களது நாகரிகத்தைப் பரவச்செய்ததாகவும் சரித்திரம் கூறுகிறதல்லவா? இவ்விஷயத்தை மேற்றிசையார் ஒப்புக்கொண்டனரா? இல்லை. அத்தகைய சரித்திரம் மூலமற்றதென்கிற காரணத்தினாலேயே ஆரியர்கள் அங்கு குடியேறியதையும் அவர்களால் அங்கு நாகரிகம் பரவியதென்பதையும் ஒப்புக்கொள்ள மேற்றிசையார் ஸம்மதிக்கவில்லை. ஐரோப்பாவிலுள்ள பல மனுஷ்யவர்க்க தத்வசாஸ்திரிகளும் (Anthropologists) இவ்விஷயத்தை ஆராய்ச்சி செய்து இது மூலமற்றதென்று தள்ளிவிட்டார்களாம். தவிரவும், ஜர்மெனியிலுள்ள பல மேதாவிகளும் ஒன்றுசேர்ந்து வேதங்களை எவ்வளவோ பரிசோதித்துப் பார்த்தும் இதற்குப் பிரமாணமொன்றுமில்லையென்று நிர்ணயித்தார்களாம். ஆகவே மத்ய ஏஷியாவிலிருந்து ஆரியர்கள் மேற்கு தேசங்களில் குடியேறியதாகிய ஒரு பாகம் ஒப்புக்கொள்ளப்படாமலிருக்கையில், இந்தியாவில் அவர்கள் குடியேறியதாகச் சொல்லப்படும் கதைமட்டும் எப்படி ஒப்புக்கொள்ளத்தக்கதாகும்? ஆனதால் ஆரியர்கள் இந்தியாவில் வஸித்து வந்த பூர்விகஜாதியர்கள்தானென்று நவீன சரித்திரக்காரர்கள் முடிவு செய்கிறார்கள்.

ஆனால் „மாக்ஸ்மூல்லர்" ரிக்வேதத்தில் காணப்படுகிற "अनास" என்கிற பதத்திற்கு „மூக்கில்லாதவர்கள்" என்கிற அர்த்தத்தை ஒப்புக்கொண்டு இந்தியாவிலிருந்த பூர்விக ஜனங்கள் தட்டை மூக்குள்ளவர்களென்றும், ஆரியர் கூரிய மூக்குள்ளவர்களாகையால் அவர்கள் இந்தியாவில் புதிதாகப் புகந்தவர்களென்றும செய்திருக்கும் ஊஹத்தையும், மற்ற யுக்திகளையும் நவீனர்கள் பலமான ஆதாரங்களுடனும் யுக்தியுடனும் மறுத்து ஆக்ஷேபித்திருக்கிறார்கள். இவ்விஷயமான விவரங்களை விஸ்தாரபயத்தால் நாம் இங்கு எடுத்துச்சொல்லப்போவதில்லை. எப்படியிருந்தாலும் தற்போது நம் தேசத்தில் கிளம்பியிருக்கும் ஆதித்திராவிடர், திராவிடர் போன்ற ஒவ்வொரு வகுப்பாரும் தம்தம்

இனத்தா[illegible]ள் தான் இந்தியாவின் பூர்விகஜனங்களென்றும் மார் தட்டிச்[illegible]ல்லிக்கொள்ளும்போது, அவர்கள் தங்கள் மூக்கைத் தொட்டு[illegible]பார்த்துக் கொண்டு பேசும்படி நேரிட்டுவிடுமாகையால் மாக்ஸ் முல்லருடைய அர்த்தத்தைப் பொதுவாக ஒருவரும் அங்கீகரிக்கவில்லை. இக்கதைகளின் வாஸ்தவம் எப்படியாயினும் இருக்கட்டும். அதனால் நமக்கொன்றுமில்லை. ஆனால் இதுபோன்றதோர் சிறிய விஷயத்திலேயே சரித்திரக்காரர்களுக்குள் கக்ஷிச்சண்டைகள் இருக்கும்போது ஹிந்துக்களின் மேன்மையான நாகரிகத்திற்கே மூலமாயுள்ள ஜாதிவிஷயம்போன்ற பெருத்தவிசாரங்களில் பிரமாணவிருத்தங்களான சரித்திரக்கதைகளை ஆஸ்திக ஹிந்து எவனும் நம்பக்கூடாதென்பதற்காகவே நாம் இவ்வளவு எழுத நேரிட்டது. இப்படி நாம் எழுதுவதைக் கொண்டு சரித்திரங்களை நாம் முற்றிலும் த்வேஷிப்பதாக யாரும் எண்ணக்கூடாது. சரியான உண்மையைத் தெரிவிக்கக்கூடிய சரித்திரங்களால் பல நன்மைகளுண்டென்பதை நாம் மறுக்கவில்லை. ஆயினும் நமது கௌரவம் வாய்ந்த பிரமாணங்களும் சரித்ரங்களும் ஒருவிஷயத்தில் விரோதித்துக்கொள்ளும்போது மனு பராசரர் போன்ற நமது முன்னோர்களுடைய வார்த்தைகளைப் புறக்கணித்துவிட்டு எவ்வித மூலமுமற்ற சரித்ரங்களை நாம் நம்பிவிடுவது அடுக்குமா? ஆகையால் நமது பிரமாணங்களுக்கு சிறிதும் விரோதிக்காத சரித்திரங்களை ஒருவாறு நாம் நம்பலாமேயல்லாது பிரமாணவிருத்தமான சரித்திரத்தை ஒருக்ஷணம் கூட நாம் நம்பி மோசம்போகக்கூடாதென்பதே நமது வாதமாகும். இதுபோல் வேதகாலத்தில் ஜாதிபேதமில்லையென்று இவர்கள் சொல்லுவதற்கு பிரமாணம் என்ன ? இவ்விஷயத்தை தெரிவிக்கக்கூடிய தஸ்தாவேஜிகளாவது தாமிர சாஸனங்களாவது உண்டானால் ஏன் அவைகளை இவர்கள் வெளிப்படுத்தவில்லை ? இது இவர்களுடைய புத்திசாதுர்யத்தால் ஊஹிக்கப்பட்டதென்றால் அது நமது பிரமாணங்களுக்கு நேர் விருத்தமாயிருப்பதால் ஒப்புக்கொள்ளத்தக்கதில்லை. வேதகாலத்தில் ஜாதிபேதமில்லையென்று சொல்லுகிறார்கள். இங்கு „வேதகால" மென்கிறதோர்

காலத்தையே நாம் ஒப்புக்கொள்ளுவதற்கில்லை. வேதங்கள் அநாதியானவை. அவை பிரசாரத்திலில்லாதகாலமொன்று கிடையாது. ஸ்ருஷ்டிகாலத்திற்கு முன்காலம் முதல் இன்றுவரையிலும் வேதம் பிரசாரத்திலிருந்து வருவதாகவே நமது பிரமாணங்களால் வெளியாவதால் எல்லாம் வேதகாலந்தான், இம்மாதிரி ஸ்வச்சந்தமாக காலவிபாகம் செய்துகொண்டதும் பிரமாணவிருத்தமாதலால் ஒப்புக்கொள்ளத்தகுந்ததில்லை. ஏனெனில், பிரம்மா உலகத்தை ஸ்ருஷ்டிசெய்யும்போது பிராணிகளை எப்படி ஸ்ருஷ்டிப்பது, அவைகளுக்குப் பெயர் என்ன இடுவது, இதுபோன்ற ஸகலவிஷயங்களையும், வேதங்களிலிருந்து தாம் அறிந்துகொண்டு அவைகளில் சொல்லப்பட்டிருக்கிறமாதிரியைப் பின்பற்றியே உலகஸிருஷ்டியைச் செய்தாரென்று பராசரர்

नामरूपञ्च भूतानां कृत्यानाञ्च प्रपञ्चनम् । वेदशब्देभ्यएवादौ देवादीनां चकार सः । ऋषीणां नामधेयानि यथा वेदश्रुतानि वै ॥

என்பதால் வெகு ஸ்பஷ்டமாகச் சொல்லியுள்ளார். இப்படி உலகஸிருஷ்டிக்கே வேதம் மூலமென்று நமது பிரமாணம் உத்கோஷிப்பதால் ஸிருஷ்டிகாலத்திற்கு முன்காலம் முதற்கொண்டே வேதம் பிரசாரத்திலிருப்பதாக நன்கு விளங்குகிறது. இத்தகைய பிரமாணத்தை பாதிக்கக்கூடிய வேறு பிரமாணமிருந்தாலன்றி பூர்வபக்ஷிகளுடைய யுக்திகளாவது ஊஹங்களாவது எந்த விவேகமுள்ள மனிதனாலும் ஒப்புக்கொள்ளத்தக்கதில்லை. ஆகையால் வேதகாலமென்று ஒருகாலத்தை நிர்ணயிப்பதும் அஸங்கதமாகும். இனி வேதகாலத்தில் ஜாதிபேதமில்லாமல் குணகர்மங்களை யனுஸரித்தே அது உண்டானதென்பதற்குப் பிரமாணமாக எடுக்கப்பட்ட ரிக்வேதமந்திரத்தை விசாரிப்போம். தன்னுடைய கக்ஷிக்கு எவ்விதத்திலும் ஸாதகமற்றதான ஷை மந்திரத்தை சரித்திரநிபுணர் தனக்கு ஸாதகம்போல் காட்டியிருப்பது மிகவும் அஸங்கதமானது. ஷை மந்திரமானது ஓர் யாகத்தில் ஸோமரஸத்தைப் பிழியும் ஸமயத்தில் யஜமானனால்

உபயோகிக்கவேண்டியதாக விதிக்கப்பட்டிருக்கிறது. யஜமானன் ஸோமலதையைப் பார்த்து ஸ்துதிசெய்யும்போது "ஹே ஸோமமே! நான் செய்கிற இந்த யாகத்தில் இந்திரதேவதையின் பொருட்டு நீர் ஸோமரஸமாகஸ்ரவிக்கவேணும்" என்று பிரார்த்தித்து, ஸோம தேவதைக்கு தன்னிடம் கிருபை ஏற்படவேண்டியதற்காகத் தன் குடும்பத்தினர் எப்போதும் யக்ஞத்திற்கே ஈடுபட்டுச் செய்துவரும் கைங்கரியங்களைக் குறிப்பிடுகிறான், "நான் யக்ஞத்திற்கு வேண்டிய ஸ்தோத்ரசஸ்திராதி மந்திரங்களைச் சொல்லுகிற கவியாயிருக்கிறேன். எனது பிதா, யாகங்களில் மந்திரதந்திரலோபம் ஏற்படாமல் பாதுகாத்துவருகிற வைத்தியன்போன்ற ஓர் "ரித்விக" என்றும், என் தாய் யக்ஞத்திற்கு வேண்டிய புரோடாசாதி ஹவிஸ்ஸுக்காக மாவு அரைத்துக்கொடுப்பவள் என்றும், ஆகவே குடும்பத்தில் ஒவ்வொருவரும் தனித்தனியாக யக்ஞத்திற்கே சுச்ரூஷைசெய்கிறவர்களாயிருப்பதால், பசுவைப்போல் உன்னையே நாங்கள் அண்டி நிற்கிறபடியால், என்னுடைய இஷ்டத்தை நீ பூர்த்திசெய்யவேணு"மென்று பிரார்த்திக்கிறான். இங்கு சரித்திரநிபுணர்கள் கூறிய அர்த்தத்தை எடுத்துக்கொண்டால் யஜமானன் ஸோமலதையைப்பார்த்துப்பிரார்த்திப்பதும் அதற்கு நாங்கள் ஒவ்வொருவரும் தனித்தனியான தொழிலும் ஜாதியும் உள்ளவர்களென்று சொல்லுவதும் குழந்தைப்பேச்சைப்போல் முன்பின் ஸம்பந்தப்படாமலும், அஸங்கதமாயுமிருப்பதை யாவரும் எளிதில் அறியக்கூடும். தவிர, ஹே ஸோமதேவனே! நீ இந்திரனைப்பொருட்டு ரஸமாக வெளிவரவேணுமென்று சொல்லுகிற மந்திரத்தின் கடைசிபாகம் சரித்திரக்காரர் சொல்லும் அர்த்தத்தில் எவ்விதமும் சேரமுடியாமல் தனித்து நின்றுவிடுவதையும், முன்பின் விரோதத்தையும் புத்திமான்கள் விமர்சித்துப் பார்த்தால் அவர்கள் சொல்லிய அர்த்தம் மிகவும் பொருத்தமற்றதென்று நன்றாக விளங்கக்கூடும். ஆகையால் இந்த மந்திரத்தைக் கொண்டு வேதகாலத்தில் ஜாதிபேதமில்லையென்றும், அது குணகர்மங்களை

யனுஸரித்தே வருமென்றும் சொல்லும் ஆக்ஷேபமும் பிரமாண மும் விபரீதமென்றே முடிந்தது.

வேதங்களில் ஜாதிபேதத்தைப்பற்றிய விவரணம்.

இனி ஜாதிபேதத்தைப்பற்றி வேதங்களில் சொல்லப் பட்டிருப்பதை நிரூபித்து அவை ஜன்மஸித்தங்கள் தானென் பதை பிரமாணபுரஸ்ஸரமாகக் காண்பிவிப்போம். ரிக்வேதத்தி லும், யஜுர்வேதத்திலும் காணப்படுகிற புருஷஸூக்தமென் கிற வேதபாகத்தில், „விராட்புருஷனுடைய முகத்திலிருந்து பி ராமணனும், கை, துடை, கால், இவைகளிலிருந்து வரிசையாக க்ஷத்திரிய, வைச்ய, சூத்திரர்களும் ஸிருஷ்டிக்கப்பட்டதாக—

" ब्राह्मणोऽस्यमुखमासीत् । बाहूराजन्यः कृतः ।
ऊरूतदस्य यद्वैश्यः । पद्भ्या ँ शूद्रो अजायत ॥ "

என்பதால் ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டது. இங்கு „கால்களி லிருந்து சூத்திரன் உண்டானன்" என்று ஸ்பஷ்டமாகச் சொல் லப்படுவதால் நான்கு ஜாதிகளும் ஈச்வானாலேயே ஸிருஷ்டிசெய் யப்பட்டனவேயன்றி குணகர்மங்களால் உண்டாகக்கூடியவை யல் லவென்பது வெளியாகிறது.

புருஷஸூக்தம் கல்பிதமன்று.

இங்கு பூர்வபக்ஷிகள், "புருஷஸூக்தத்தில் ஜாதிபேதத்தைப் பற்றிச் சொல்லப்பட்டிருப்பது வாஸ்தவமாயினும், புருஷஸூக் தத்தை அநாதியான வேதபாகமென்று நம்பமுடியாதென்றும், அதன் நடையைக் கவனிக்குமளவில் அது பின்னிட்டு ரிஷிகளால் எழுதப்பட்டு வேதத்தில் சேர்க்கப்பட்டிருக்கலாமாகையால் அதை பிரமாணமாக நம்பமுடியா"தென்றும் வாதிக்கிறார்கள். இது மிக வும் விநோதமான துர்வாதமாகும். நமது பூர்வபக்ஷிகள், தங்களது கக்ஷிக்கிப்பாதகங்களாகக் காணப்படுகின்றவே தங்களையோ, ஸ்மிருதிகளையோ, "அவைகள் புதிதாகையால் நாங் கள் நம்பவில்லை" யென்று தந்திரமாக ஸமாதானம் சொல்லித் தள் ளப்பார்ப்பது வழக்கமாயிருக்கிறது. பிரம்மாண்டமான வேதபா கத்தில் புருஷஸூக்தம் ரிஷிகளால் எழுதப்பட்டு வேதத்தில் சேர்க்கப்பட்டதென்று இவர்கள் எந்த யோகதிருஷ்டியால் கண்

பிடித்தார்களோ தெரியவில்லை. சரித்திரகாலத்திற்கு மெட்டாத காலத்திலிருந்த "ஆபஸ்தம்பர்" போன்ற பல மகரிஷிகள் புருஷ ஸூக்தத்தை வேதமாகவே மதித்து அதை உபயோகப்படுத்த வேண்டிய இடத்தையும் குறிப்பிட்டுச் சொல்லியுள்ளார்கள். புருஷஸூக்தம் வேதத்தில் இல்லாமல் போனால் புருஷஸூக்தத்தை முக்கியமாக அபேக்ஷித்து நிற்கும், "பிரம்மமேதம்" போன்ற பல கர்மங்கள் மந்திரக்குறைவினால் பூர்த்தியடையாமலேயே போக நேரிடும், ஆபஸ்தம்பாதிகளுக்குப் பிற்பட்ட பல ரிஷிகளும், ஸ்ரீ சங்கர, ராமானுஜாதி, மதாசாரியர்களும் புருஷஸூக்தத்தை வேதபாகமாகவே மதிக்கிறார்களென்பது அவர்களுடைய கிரந்தங்களிலிருந்து வெளியாகிறது. கீதையில் " **चातुर्वर्ण्यं मया** " என்கிற ச்லோக பாஷ்யத்தில் " **ब्राह्मणोऽस्यमुखमासी " दिति श्रुतेः** என்கிற வாக்கியத்தால் புருஷஸூக்தத்தை சுருதியென்றே ஸ்ரீசங்கராசாரியர் வ்யவஹரித்திருப்பதைக் காணலாம். இதுபோல் சாந்தோக்ய உபநிஷத்தில்—

" **तदेतदृचाप्यनूक्तं तावानस्यमहिमातोज्यायांश्च पुरुष इति ॥** "

என்கிற வாக்கியத்தில் புருஷஸூக்தத்தை ரிக்வேதமென்று சொன்னதுடன் புருஷஸூக்தமந்திரமும் அனுவதிக்கப்பட்டிருப்பதைப் பார்த்தாலும் அது அநாதியென்பது ஸ்பஷ்டமாகும். இவ்வித பிராமணங்கள் கர்ஜித்துக்கொண்டிருக்கையில் நமது பூர்வபக்ஷிகளுடைய வாதத்தை நாம் எப்படி நம்பமுடியும்? தவிர புருஷஸூக்தத்தை எந்த ரிஷி எக்காலத்தில் எக்காரணத்திற்காகச் செய்து வேதத்தில் புகவிட்டார் என்கிற கேள்விகளுக்கு ஸரியான பதில் கிடைக்கவில்லையாகையால் இவ்வாதம் துர்வாதமென்றே தள்ளத்தகும். ஆயினும் புருஷஸூக்தத்தைத்தவிர வேறு இடங்களிலும் வேதத்தில் ஜாதி பேதங்களின் ஸ்ருஷ்டியைப் பற்றிச் சொல்லியிருப்பதை விளக்கிக்காட்டமுடியும். யஜுர்வேதம் ஏழாவதுகாண்டத்தில் நான்குஜாதிமுதலியவைகளின் ஸ்ருஷ்டி விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த வாக்கியங்களை இங்கே எடுத்துக்காட்டுகிறோம்.

" **प्रजापतिरकामयत प्रजायेयेति समुखतस्त्रिवृतं निरमिमीत तमग्निर्देवतान्वसृज्यत गायत्रीछन्दोरथन्तरꣳ साम ब्राह्मणोमनुष्याणामजः पशूनां तस्मात्ते मुख्यामुखतोह्यसृज्यन्त ॥** "

பிரஜாபதியாகிற பிரம்மமானது தான் பிரஜைகளை ஸ்ருஷ்டிசெய்ய ஆசைகொண்டு தனது முகத்திலிருந்து "த்ரிவிருத்" என்பதையும், தேவதைகளுக்குள் அக்னிதேவதையையும், சந்தஸ்ஸுகளுக்குள் காயத்ரீசந்தஸ்ஸையும், ஸாமங்களுக்குள் "ரதந்தரம்" என்கிற ஸாமத்தையும், மனுஷ்யர்களுக்குள் பிராமணனையும், பசுக்களுக்குள் "அஜம்" என்கிற ஜாதி ஆட்டையும் ஸிருஷ்டி செய்தார். கீழ்ச்சொல்லியவைகள் பிரம்மத்தின் முகத்திலிருந்து உண்டானவைகளாதலால் "முக்கிய" மென்று வ்யவஹரிக்கப்படுகின்றன. இந்த வாக்கியத்தில் "ஸிருஷ்டிசெய்யப்பட்டது" என்கிற அர்த்தத்தைக் கொடுக்கக்கூடியவைகளான "**असृज्यत, असृज्यन्त**" என்கிற பதங்கள் பிரயோகிக்கப்பட்டிருப்பதைக் கவனிக்கவேணும். இப்படி பிராமணன் முதலியவர்களின் ஸிருஷ்டியைச் சொல்லிவிட்டு வேதம் மேலே சொல்லுகிறது.

उरसोबाहुभ्यां पञ्चदशन्निरमिमीत तमिन्द्रोदेवतान्वसृज्यत त्रिष्टुप्छन्दो बृहत्सामराजन्योमनुष्याणामविः पशूनां तस्मात्तेवीर्यावन्तो वीर्याद्ध्यसृज्यन्त ॥

பிறகு பிரம்மமானது மார்பு, கை, இவைகளிலிருந்து "பஞ்சதசம்" என்கிற ஸ்தோமத்தையும், இந்திரதேவதையையும், 'த்ரிஷ்டுப்' என்கிற சந்தஸ்ஸையும், பிருஹத் ஸாமத்தையும், மனிதர்களுக்குள் "ராஜந்யன்" அதாவது க்ஷத்திரியனையும், பசுக்களுக்குள் "அவி" என்கிற ஜாதியையும் ஸிருஷ்டிசெய்தார். இதில் சொல்லப்பட்டவர்களெல்லாரும் பலமுள்ள பிரதேசத்திலிருந்து ஸிருஷ்டிசெய்யப்பட்டவர்களாகையால் உலகத்தில் இவர்கள் பலிஷ்டர்களாகவேயிருப்பார்கள். இதன்மேல் வைசியன் முதலியவர்களுடைய ஸிருஷ்டியும் விவரிக்கப்படுகிறது.

मध्यतस्सप्तदशंनिरमिमीत तं विश्वेदेवादेवता अन्वसृज्यन्त जगती छन्दो वैरूपंसाम वैश्योमनुष्याणां गावः पशूनां तस्मात्तआद्याअन्नधानाद्ध्यसृज्यन्त ॥"

மத்யபாகமாகிய துடையிலிருந்து ஸப்ததசத்தையும், விச்வேதேவர்களையும் ஜகதீசந்தஸ்ஸையும், வைரூபமென்கிற ஸாமத்தையும் மனுஷ்யர்களுக்குள் வைச்யர்களையும், பசுக்களில் பசுமாடு, காளைமாடு இவைகளையும் ஸிருஷ்டி செய்தார். இதன் பிறகு சூத்

திரர் முதலியவர்களுடைய ஸிருஷ்டியைப் பற்றிச் சொல்லுகிறது.

"पत्तएकविंशत्निरमिमीततमनुष्टुप्छन्दोऽन्वसृज्यत वैराजंसामशूद्रोमनुष्याणामश्वः पशूनाम् ॥"

பிரம்மமானது தனது காலிலிருந்து ஏகவிம்சத்தையும், அநுஷ்டுப்சந்தஸ்ஸையும், வைராஜமென்கிற ஸாமத்தையும், மனிதர்களுக்குள் சூத்திரர்களையும், பசுக்களில் குதிரையையும், ஸிருஷ்டிசெய்தது. இவ்வாறு யஜுர்வேதத்தில் ஸ்பஷ்டமாயும் விஸ்தாரமாயும் நான்கு ஜாதிகளுடைய ஸிருஷ்டிசொல்லப்பட்டிருப்பதால் ஜாதி ஜன்மஸித்தமென்றே நிச்சயிக்கலாகும். இதுபோல் ஐதரேயப் பிராம்மணத்திலும்,

"प्रजापतिर्यज्ञमसृजत । यज्ञंसृष्टमनुब्रह्मक्षत्रे असृज्येताम् । ब्रह्मक्षत्रेअनुद्वय्यः प्रजाअसृज्यन्त हुतादश्चाहुतादश्च । एतावैप्रजाहुतादोयद्ब्राह्मणाः । अहुतादोयद्राजन्योवैश्यश्शूद्रइति ॥"

"பிரஜாபதியென்கிற பிரம்மமானது யக்ஞத்தை ஸ்ருஷ்டிசெய்தது. அதையொட்டி 'ஹுதாதர்' என்று வ்யவஹரிக்கப்படும் பிராமணர்களும் "அஹுதாதர்"எனப்படுகிற க்ஷத்திரிய, வைச்ய, சூத்திரர்களும் ஸிருஷ்டிக்கப்பட்டார்கள். இங்கும் "ஸிருஷ்டிக்கப்பட்ட"தெனகிற பதப்ரயோகமிருப்பது கவனிக்கத்தக்கது. வாஜஸநேயகமெனப்படுகிற சுக்லயஜுர்வேதத்திலும் பிராம்மணாதிஜாதிகள் ஸிருஷ்டிக்கப்பட்ட விவரம் ஸ்பஷ்டமாகக் காணப்படுகிறது.

"ब्रह्मवाइदमासीदग्रएकमेव । तदेकंसन्नव्यभवत् । तच्छ्रेयोरूपमत्यसृजतक्षत्रम् । सनैवव्यभवत् । सविशमसृजत । सनैवव्यभवत् । सशौद्रं वर्णमसृजत ॥"

அதாவது முதலில் பிராம்மணனே ஸிருஷ்டி செய்யப்பட்டான். அவன் ஒருவனாக இருந்துகொண்டு ராஜ்யபாரம் முதலிய பெரிய காரியங்களைச் செய்யச்சக்தியற்றிருந்தான். அதன ஸஹாயார்த்தமாகப் பிறகு க்ஷத்திரியன் ஸிருஷ்டிக்கப்பட்டான். அவனாலும உலகநிர்வாகம் செய்யமுடியவில்லை. பிறகு ஸகாயத்தின்பொருட்டு வைசியனும், சூத்ரனும் ஸிருஷ்டிக்கப்பட்டார்கள், ஆகையால் லோகம் நடைபெறுவதற்கே இந்த நான்குஜாதிகளும் தனித்தனியான ஊழியங்களைச்செய்து ஸாதகமாயிருப்பதால் நான்குஜாதி ஸிருஷ்டி அவசியமாயிற்றென்று வேதம் சொல்லிமுடிக்கிறது.

இவ்வளவு தூரம் நாம் நிரூபித்த பிறகும் சரித்திரக்காரர்கள் வெளியிட்டிருக்கும் மிகவும் முக்கியமான தோர் ஆக்ஷேபத்தையும் இங்கு குறிப்பிட்டு அதற்கும் பதில் சொல்லவேண்டியது அவசியமாகிறது. அதாவது மந்திரம், பிராம்மணம், அர்த்தவாதம், என்று மூன்று வகையாகப் பிரிந்து நிற்கும் வேதத்தில் மந்திரபாகமே வெகு பிராசீனமென்று சொல்லப்படக்கூடியது, மற்ற இரண்டு பாகங்களும் ரிஷிகளால் செய்யப்பட்டு பின்பு வேதத்தில் சேர்க்கப்பட்டிருக்கவேணும். ஆகையால் புதிதாகச் செய்யப்பட்ட வேத பாகங்களில் ஜாதி பேதத்தைப்பற்றி பிரஸ்தாவமிருப்பது ஸஹஜமாயினும், வெகு பிராசீனமாகிய மந்திர பாகங்களில் ஜாதி பேதங்களைக் காட்டக்கூடிய பதங்களே கிடையாதாகையால் ஜாதி பேதம் பின்பு ஏற்பட்டதென்றே சொல்லத்தகுமென்று சரித்திர நிபுணராகிய "ரமேசசந்திரதத்தர்" என்கிற இந்திய கனவான் தனது புத்தகத்தில் சொல்லுகிறார்கள். இவர் நல்ல ஹிந்து குலத்தில் பிறந்தவராயினும், ஹிந்துக்களுடைய பிரமாணக் கிரந்தங்களை மூலங்களாகக்கொண்டு விஷய ஆராய்ச்சி செய்யக் கடமை பெற்றவராயினும், அம்மாதிரி செய்யாமல், முற்றிலும் யூரோப்பியர்களுடைய சரித்ரங்களையே மூலமாகக்கொண்டு இம்மாதிரி எழுதிவிட்டபடியால் இது பிரயோஜநமற்ற கதையென்றே நாம் தள்ளிவிடவேணும்; வேதத்தில் ஒரு பாகம் பிராசீனமென்றும், மற்றொன்று புதிதென்றும் கண்டுபிடிக்க இவர்களுக்கு யோகதிருஷ்டிகூட ஈச்வரனால் கொடுக்கப்பட்டிருக்கிறதுபோலும் ! ! இல்லையேல் எப்படி இவர்கள் அம்மாதிரி கண்டுபிடித்தார்கள் ; இவர்களுடைய வாதம் முழுவதும் தப்பென்று பிரமாண, யுக்தி முதலிய பல ஆதாரங்களுடன் வேறு இடத்தில் நாம் நிரூபித்துள்ளோம். அவைகளை இங்கு மீண்டும் பிரஸ்தாவிக்கப்போவதில்லை.

ஆயினும், இவர்களின் அபிப்பிராயத்திற்கு விருத்தமாக மந்திர பாகங்களிலும் பல விடத்தில் ஜாதி பேதத்தைச் சொல்லக்கூடிய பதங்களிருப்பதை எடுத்துக்காட்டுவோம்.

ब्रह्मणस्त्वापरस्पायाः क्षत्रस्यतनुवः पाहि । विशस्त्वाधर्मणा ॥

என்கிற மந்திரத்தில், பிரம்ம, க்ஷத்ர, விச, என்கிற மூன்று ஜாதிச் சொற்கள் காணப்படுகின்றன, இதுபோல்

ब्रह्मजिन्वतमुतजिन्वतं धियः। क्षत्रंजिन्वतमुतजिन्वतं नॄन्। धेनूर्जिन्वतमुतजिन्वतं विशः॥

என்கிற ரிக்வேத மந்திரத்திலும் இதைப்பார்க்கலாம்,

"शूद्रायदर्यजारान्नपोषायधनायति॥"

என்கிற மந்திரத்தில் சூத்ர பதமும் காணப்படுகிறது. இதுபோன்ற நூற்றுக்கணக்கான மந்திரங்களில் ஜாதிச் சொற்கள் இருப்பதை காட்டமுடியும். இப்படியெல்லாம், வெகு பிராசீனமென்று திருத்தக்காரர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட மந்திர பாகங்களிலேயே பல விடங்களில் ஜாதி பேதத்தைப்பற்றிய பதங்களிருப்பதையும், அவைகளின் அர்த்தத்தையும் கவனித்தால், ஜாதி பேதம் வெகு அநாதியென்றும், வேத காலத்திற்கும் முந்தியதென்றும் வெகு ஸ்பஷ்டமாக விளங்கும்.

இது வரையில் வெளியிட்ட பிரமாணங்களால் ஜாதி ஜந்ம ஸித்தந்தானென்று சொல்லப்பட்டது.

பூர்வபக்ஷிகளின் ஆக்ஷேபங்கள்.

ஆயினும் பூர்வபக்ஷிகள், "தலைப்பாகைக்குத்தகுந்தபடி தலையைச்சீவிவிடும், ந்யாயத்தை யநுஸரித்து, சரித்திரங்களை வேத வாக்கியமாக மதித்து, நமது சுருதி, ஸ்மிருதி, முதலிய பிரமாணங்களை சரித்ரங்களின் அபிப்பிராயத்திற் கிணங்க பலாத்காரமாக இழுத்து அர்த்தம் செய்து, ஜாதி, குணகர்மங்களை யனுஸரித்தே உண்டாகுமென்பதற்குக் காட்டிய பிரமாணங்களைப் பரிசீலித்துப் பதில் சொல்லுவோம்.

ஜாதி குணகர்மங்களையனுஸரித்துத்தான் உண்டாகிறதென்பதற்கு அவர்கள் சொல்லும் பிரமாணங்களாவன.

"चातुर्वर्ण्यं मयासृष्टं गुणकर्मविभागशः॥"

என்று கீதையில் சொல்லப்படுகிறது, அதாவது "பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர், என்கிற நான்கு வர்ணங்களும் அவரவர்களுடைய குணத்தையும், கர்மத்தையும் அநுஸரித்து உண்டாகும்படி என்னால் ஸிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன" வென்று பகவான்தானே மொழிந்தார். இதிலிருந்து, சம தமாதி குணங்களும், பிரம்மஞானமும் பொருந்திய மனிதனை பிராமணனென்றும், யுத்தஸாமர்த்தியாதி குணங்களுள்ளவனை க்ஷத்திரியனென்றும், கிரு

ஷி, வியாபாரம், முதலியவைகளில் பிரவேசித்தவனை வைசியனென்றும், ஊழியஞ்செய்து ஜீவிப்பவனை, சூத்திரனென்றும் குணத்தையநுஸரித்து வ்யவஹரிக்கலாமென்று ஏற்படுகிறது.

(2.) தவிர ஸ்மிருதிகளிலும் இதை யனுஸரித்தே ஜாதி விஷயம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது. இவ்விஷயம் கீழ்காட்டப்பட்டிருக்கிற வசநத்தால் ஸ்திரப்படுத்தப்படுகிறது. அதாவது.

जन्मना जायते शूद्रः संस्काराद्द्विजउच्यते ।
विद्यया याति विप्रत्वं ब्रह्मविद्ब्राह्मणो भवेत् ॥

இங்கு, மனிதன் பிறக்கும்போது சூத்திரனாகவே பிறக்கிறானென்றும், ஸம்ஸ்காரங்களாலும், படிப்பாலும், பிரம்மஞானத்தாலும், அவன் த்விஜனென்றும், விப்ரனென்றும், பிராமணனென்றும் சொல்லப்படுவானென்றும், ஸ்பஷ்டமாயிருப்பதால் ஜாதி, குணத்தை யனுஸரித்ததென்பது ஆக்ஷேபிக்கக்கூடியதல்ல.

(3) இதுபோல்

" शूद्रयोनौ प्रजातस्य सद्गुणानुपतिष्ठतः । वैश्यत्वं लभ्यते ब्रह्मन् क्षत्रियत्व तथैवच ॥ आर्जवेवर्तमानस्य ब्राह्मण्यमपि जायते ॥ "

என்கிற பிரமாணமும் கவனிக்கத்தக்கது. இந்த வசனத்தில் " சூத்திர ஜந்மத்தில் பிறந்தவன் நற்குணங்கள் படைத்தவனாயிருந்தால் அவனுக்கு வைச்யத்தன்மையும், க்ஷத்திரியத்தன்மையும் உண்டாகும், ருஜுமார்க்கத்திலிருப்பவனுக்கு பிராமண்ணியமும் உண்டாகும் " என்று சொல்லப்படுகிறது. இதுபோல் இன்னும் பல வசனங்களுண்டு.

(4) இனி கீழ்ச்சொல்லிய வசனங்களுக்கு திருஷ்டாந்தமாக பல விஷயங்களுண்டு. நமது முன்னோர்களென்றும், ஈச்வராம்சம் பெற்றவர்களென்றும், திரிகால ஞானிகளென்றும் வெகுவாக நம்மால் கொண்டாடப்படுகிற, வஸிஷ்ட, வ்யாஸாதி மஹார்ஷிகளுடைய உத்பத்தியைக் கவனித்தால் கீழ் சொல்லிய வசநங்களின் உண்மை புலப்படும். மேற்கூறிய ரிஷிகளின் ஜந்மத்தைக் கவனியுங்கள்.

" जातोव्यासस्तु कैवर्त्याः श्वपाक्यास्तु पराशरः । शुक्याश्शुकस्तथोलूक्याः कणादाख्यस्तुतोभवत् ॥ ऋश्यशृङ्गस्त्वभून्मृग्याः वसिष्ठो गणिकात्मजः ॥ "

என்று, வஸிஷ்ட, பராசர, வியாஸாதி ரிஷிகள் தாழ்ந்த ஜாதி ஸ்திரீகளிடம் பிறந்தவர்களாயிருந்தும் தபோமஹிமையாலே பிராமண்ணியத்தை அடைந்ததாகவே தெரிகிறது. இங்கு க்ஷத்திரிய குலத்தில் பிறந்த விச்வாமித்திரர் பிறகு பிராமண்ணியத்தை அடைந்த விஷயமும் பிரபலமானதோர் உதாஹரணமாகக் கொள்ளத்தகும். இன்னுமிதுபோல் பல பிரமாணங்களை விமர்சித்துப்பார்த்தாலும் ஜாதி, குணத்தினாலேயே ஏற்படக்கூடியதென்பது நிச்சிதமாகிறது. இவ்வாறு நமது பூர்வபக்ஷிகள் ஜாதியைப்பற்றி ஸித்தாந்தம் செய்துவிட்டார்கள்.

இனி இவர்கள் காட்டிய பிரமாணங்களை ஒவ்வொன்றாக விசாரித்துப் பதில் சொல்லுவோம்.

ஆக்ஷேபங்களுக்கு பதில்.

கீதை சுலோகத்தின் அர்த்தம்.

(1) முதலாவது கீதையில் உள்ள "சாதுர்வர்ண்ய" என்கிற ச்லோகமே இவர்களுக்கு கல்பக விருக்ஷத்தைப்போல் இஷ்டத்தைப் பூர்த்திசெய்யக்கூடியதாயிருக்கிறதாம். இது அவர்களுடைய இஷ்டத்தை ஒரு நாளும் பூர்த்திசெய்யாதென்று நிரூபிப்போம்.

இந்த சுலோகத்திற்கு, ஸ்ரீசங்கர, ராமானுஜாதி பாஷ்யகாரர்கள் செய்துள்ள வியாக்யானத்தையும், நியாயத்தையும், ச்லோகத்தின் நடையையும், நன்கு கவனித்தால் பூர்வபக்ஷிகள் செய்த அர்த்தம் மிகவும் அஸங்கதமென்பது புலப்படும்.

"பிராமண, க்ஷத்திரிய, வைச்ய, சூத்திரன், என்கிற நான்கு ஜாதிகளும் அதற்குரிய ஸத்வாதி குணங்களுடனும், கர்மங்களுடனும், பிரிக்கப்பட்டு என்னால் ஸிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன" என்று பகவான் சொன்னார். இங்கு ஒரு ஜீவனை பிராமணனாகவும், மற்றொருவனை க்ஷத்திரியனாகவும், ஏற்றத்தாழ்வுசெய்து ஈச்வரன் ஸிருஷ்டி செய்தால், அவன் பக்ஷபாதமுள்ளவனென்று நினைக்காமலிருப்பதற்காக அவனவன் பூர்வ ஜன்மத்தில்செய்த கர்மானுகுணமாகவே ஜாதி கொடுக்கப்படுகிறதேயல்லது வேறில்லையென்று "குணகர்ம விபாகச:" என்பதால் ஸூசிப்பித்தார். அதாவது ஜன்மாந்தரத்தில் உத்தமகுணங்களுடனிருந்தவனுக்கு உத்தம ஜாதியும், கீழ்ப்பட்ட குணமுள்ளவனுக்கு அதற்கநுகுண

மான ஜாதியும் கொடுக்கப்பட்டு ஸிருஷ்டிசெய்யப்படுகிறதாக பகவானுடைய வாக்கியத்தால் தெரியவருகிறதேயல்லது வேறுவித அர்த்தத்திற்கு இடமேயில்லை. இவ்வர்த்தம் ஸ்ரீராமாநுஜபாஷ்யத்திலிருந்து ஸ்பஷ்டமாக வெளியாகிறது. இதுபோல் ஸ்ரீசங்கராசாரியபாஷ்யமும் அவசியம் கவனிக்கத்தக்கது.

அந்த வாக்யமாவது—

"चत्वारोवर्णाः चातुर्वर्ण्यम् । मया ईश्वरेण सृष्टं उत्पादितम् । ब्राह्मणोऽस्यमुखमासीदित्यादिश्रुतेः । गुणकर्मविभागशः, तत्र सात्विकस्य सत्वप्रधानस्य ब्राह्मणस्य शमोदमइत्यादीनि कर्माणि । सत्वोपसर्जनरजःप्रधानस्य क्षत्रियस्य शौर्यतेजःप्रभृतीनि कर्माणि । तमउपसर्जनरजःप्रधानस्य वैश्यस्य कृष्यादीनि कर्माणि । रजउपसर्जनतमःप्रधानस्य शूद्रस्य शुश्रूषा । एवं गुणकर्मविभागशः चातुर्वर्ण्यं मयासृष्टमित्यर्थः ॥"

அதாவது "நான்கு வர்ணங்கள், ஈச்வரனை என்னால் ஸிருஷ்டி செய்யப்பட்டன. பிராம்மணன், பிரம்மத்தின் முகத்திலிருந்து உண்டானன் என்ற அர்த்தமுள்ள "ब्राह्मणोऽस्यमुखमासीत्" இத்யாதி சுருதிகளே இதற்கு பிரமாணங்களாகும். இனி குணகர்மவிபாகச: என்றால், இன்னஜாதிக்கு இன்னகுணம், இன்னகர்மம் என்கிற விபாகத்துடன் ஸிருஷ்டிசெய்யப்பட்டிருக்கிறது. உதாஹரணமாக ஸத்வகுணமும், சமதமாதிகர்மங்களும் பிராம்மணனுக்கென்றும், சிறிது ஸத்வகுணத்துடன் ரஜோகுணமும், சௌர்யம்முதலிய கர்மங்களும் க்ஷத்ரியர்களுக்கென்றும், சிறிது தமோகுணத்துடன் ரஜோகுணமும், கிருஷிமுதலிய கர்மமும் வைச்யர்களுக்கென்றும், சிறிது ரஜோகுணத்துடன்கூடிய தமோகுணமும், ஊழியமும், சூத்திரர்களுக்கென்றும் விபாகம் செய்யப்பட்டு என்னால் ஸிருஷ்டிக்கப்பட்டது" என்று சங்கரபாஷ்யம் கூறுகிறது. இங்கு பாஷ்யத்தில் "நான்கு வர்ணங்கள் என்னாலேயே ஸிருஷ்டிசெய்யப்பட்டன" என்று வாக்கியத்தைத் தனியாகப் பிரித்துச்சொல்லியிருப்பதுடன், அதற்கு பிரமாணமாக "பிராமணன் பிரம்மத்தினுடைய முகத்திலிருந்துண்டானன்" என்று ஆரம்பித்து ஜாதிஸிருஷ்டி அனுதியென்று உத்கோஷிக்

கிற புருஷஸூக்தவாக்யங்களைப் பிரமாணமாக ஸ்ரீசங்கராசாரியர் காண்பித்திருப்பதை ஊன்றிப்பார்த்தால், இந்த சுலோகத்திற்கும் ஜாதி அநுஷ்டியென்பதை ஒத்துக்கொள்ளுவதிலேயே தாத்பரியமென்பது வெகு ஸ்பஷ்டமாகயிருக்கிறது. தவிர இங்கு ஸிருஷ்டிசெய்யப்பட்ட ஜாதிகளையுத்தேசித்து குணம், தொழில் இவைகளை விதித்தாரேயல்லது, குணம் தொழில் இவைகளையுத்தேசித்து ஜாதியை விதிக்கவில்லையென்பது சுலோகநடையாலும் பாஷ்யபங்க்திகளாலும் வெளியாகிறதை நியாயமறிந்த பண்டிதர்களே அறியமுடியும். ஜாதி அநுதியென்பதற்கு பிரமாணமாக புருஷஸூக்தத்தை ஸ்ரீசங்கராசாரியர் எடுத்ததை நன்கு கவனித்தால், புருஷஸூக்தம் கல்பிதமென்று பூர்வபக்ஷிகள் வாதித்ததும் பறந்தோடிவிட்டது. சரித்திரக்காரர்கள் கடைசியாகச் செய்த ஆராய்ச்சியின்படி சுமார் 2500 வருஷங்களுக்குமுன் அவதரித்ததாகச் சொல்லப்படுகிற ஸ்ரீஆதிசங்கராசாரியர், புருஷஸூக்தத்தையும், கீதையையும் ஸமரஸப்படுத்தி அர்த்தம் செய்திருப்பதிலிருந்து ஜாதிபேதம் அநுதியாகவே ஏற்பட்டிருக்கின்றதென்பது வெகு ஸ்பஷ்டமாக வெளியாகிறது. ஆனல் இங்கு ஸ்ரீசங்கராசாரியர் முதலிய பாஷ்யகாரர்கள் தலையிலும் பக்ஷபாதத்தைச் சுமத்த நமது பூர்வபக்ஷிகள் துணிவார்களானல் அதைவிட வேறு ஸாஹஸகாரியமொன்றுமில்லை. சுருதிகளையும், ஸ்மிருதிகளையும், ஸ்ரீசங்கராசாரியர் போன்ற பெரியோர்களுடைய பிராமாணிகமான ஸித்தாந்தத்தையும் ஒப்புக்கொள்ள மறுதளிப்பவர்களை கடிவாளமறுந்த குதிரைகளைப்போல ஸ்வச்சந்தசாரிகளென்று மதித்துத் தள்ளிவிடுவதே நமது கடமையாகும்.

ஜாதிபேதம் இயற்கையானது.

இனி கீதையின் அர்த்தம் எவ்வாறுகவிருந்தாலும், கருணாமூர்த்தியான ஈச்வரன் எந்த பிராணிகளுக்குள்ளும் ஏற்றத்தாழ்வை உண்டுபண்ணியிருக்கமாட்டானுகையால் ஜாதிபேதம் பிற்பட்டவர்களால் கற்பிக்கப்பட்டதுதா னென்று சிலர் பிடிவாதமாக வாதித்துவருவதைக் கேட்டிருக்கிறேம். இத்தகையவர்கள்

சிறுகுழந்தைகள் போலச் சிறிதாவது உலக அனுபவமில்லாமல் இப்படி வாதிப்பதைப் பார்த்து நாம் ஆச்சரியப்படவேண்டியிருக்கிறது. பிரமாணங்களை நம்பாமல் போனாலும் லோகாநுபவத்தைக்கொண்டாவது ஈசுவரஸிருஷ்டியில் ஜாதிபேதம் இயற்கையானதென்பதை இவர்கள் அறியக்கூடாதா? நானாவித மரஞ்செடி புஷ்பங்களும, பற்பல மிருகபக்ஷிமுதலிய பிராணிகளும் நிரம்பியதோர் வநத்தில் சென்று ஒவ்வொரு இனத்தையும் இவர்கள் கவனித்துப்பார்ப்பார்களானால் இதன் உண்மை வெகு எளிதில் விளங்கிவிடும். ஒவ்வொரு இனத்திலும் அததன் குணமும், ரூபமும் வேறுபட்டு அநேகஜாதிகளிருப்பதைக் காணலாம். “மாம்பழம்” என்பது ஓர் இனமாயிருந்தும் அதற்குள் ரூபத்தாலும், ருசியாலும் பலஜாதிபேதங்கள் இயற்கையாக ஏற்பட்டிருக்கின்றன. ஒருஜாதிப்பழம் தித்திப்புள்ளதென்றும், மற்றொன்று எப்போதும் புளிப்புள்ளதென்றும், ஒன்று நார் உள்ள ஜாதியென்றும், மற்றொன்று நார் அற்றதென்றும், பல விதஜாதிப்பெயருடன் அநேகப் பிரிவுகள் இருப்பதைப் பார்க்கிறோம். இதில் புளிப்புள்ளஜாதியைத் தித்திப்புஜாதியாகவோ நார் உள்ளஜாதியை நார் அற்றதாகவோ, அல்லது வேறுவிதமாகவோ மாற்றி அதன் ஜாதியை அழித்து எல்லாவற்றையும் யாராலாவது ஒன்றுபண்ணி விடமுடியுமா? இதுபோல் வாழை ஜாதியென்பது ஓர் இனமாயிருந்தும் அதற்குள் பூவன், ரஸ்தாளி, மொந்தன் என்று பற்பலஜாதிப்பிரிவுகள் காணப்படவில்லையா? செடிகள், புஷ்பங்கள், இவைகளிலும ஒவ்வொன்றிலும் பலபிரிவுகள் நம்மால் காணப்படுகின்றனவே? பிராணிகளுக்குள்ளும், ஈ, எறும்பு, மீன் முதலிய சிறியபிராணிகள்முதல் யானைவரையிலுள்ள ஒவ்வொரு பிராணிவர்க்கத்திலும் பலஜாதிப்பிரிவுகள் ஸ்வாபாவிகமாக ஏற்பட்டிருப்பதை யாவரும் அறியலாம். மாடுகளுக்குள் எவவளவு ஜாதிபேதங்கள்! குரங்குகளுக்குள் எவ்வளவு பிரிவு, இம்மாதிரி ஒன்றல்ல இரண்டல்ல, இவவுலகில் ஸிருஷ்டிசெய்யப்பட்டிருக்கிற ஸ்தாவர, ஜங்கம, பதார்த்தங்கள் ஒவ்வொன்றிலும் ஜாதிபேதத்தை இயற்கையாகவே

ஈசுவரன் ஸ்ருஷ்டித்தேதானிருக்கிறார். இப்படியிருக்க மனித இனத்தில் மட்டும் ஜாதிபேதத்தை ஈசுவரன் உண்டுபண்ணியிருக்கமாட்டாரென்றும் நாம் எப்படிச் சொல்லமுடியும்? எல்லாவகையான பிராணிகளுக்குள்ளும் ஜாதிபேதம் இயற்கையாக அமைக்கப்பட்டிருக்கும்போது மனிதர்களுக்குள்ளும் அது கட்டாயம் அமைக்கப்பட்டிருக்கத்தான் வேணும். இவ்விஷயங்களனைத்தையும் மனதிற்கொண்டுதான் "பசு, பக்ஷி முதலியவைகளுக்கு ஜாதி எப்படி ஜன்மத்தினாலேயல்லாது கர்மத்தினால் உண்டாகிறதில்லையோ அதுபோலவே மனிதர்களுக்குள்ளும் ஜாதிபேதமானது இயற்கையாகவே ஏற்பட்டதேயல்லது குணகர்மங்களால் மட்டும் ஒருபோதும் ஏற்படாது" என்று ஸ்ரீஸூதஸம்ஹிதையில் சிவமாஹாத்மிய கண்டத்தில்,

सर्वेषां जन्मना जातिर्नान्यथा कर्मकोटिभिः ।
पश्वादीनां यथाजाति र्जन्मनैव नचान्यथा ॥ (१२-५१)

என்பதால் சொல்லப்பட்டது. இங்கு ஜாதிவிஷயத்திற்கு பசு முதலியவைகளை திருஷ்டாந்தமாக எடுத்திருப்பதின் ஸூக்ஷ்மத்தை திருத்தக்காரர்கள் கவனித்தல் அவசியம். ஆனால் மனிதர்களுடைய ஜாதிபேதத்தை அழித்து எல்லாவற்றையும் ஒன்றுபடுத்திவிடலாமென்று பலர் நினைக்கிறார்கள். இது தவறு. ஒரு ஜாதிசரீரத்திற்கும், மற்றொருஜாதி சரீரத்திற்கும் இயற்கையாகவே பலபேதங்களிருப்பதால் அது ஒன்றோடொன்று கலந்துகொள்ளக்கூடாதென்றும் அதனால் பலதீங்குகள் விளையுமென்றும் சரீரதத்வசாஸ்திரங்களையறிந்த நமது ரிஷிகள் கட்டளையிட்டார்கள். இக்காலத்திலும் ஸர் ஹார்பர்ட் ஸ்பென்ஸர் போன்ற ஆங்கிலரஸாயன சாஸ்திரிகளும் இவ்விஷயத்தை அங்கீகரித்திருக்கிறார்கள். ஜப்பானியர்களும் ஆங்கிலேயர்களும் விவாஹாதிஸம்பந்தங்களைச் செய்துகொள்ளக்கூடாதென்பதற்கு இதையே காரணமாக காட்டி 1892-ம் வருஷத்தில் ஸ்பென்ஸர் என்பவர் ஓர் ஜப்பானிய அதிகாரிக்கு எழுதியிருக்கிறார்.

ஆகையால் நாம் ஹிந்துக்களென்று ஒரே இனத்தாராயி

ருந்தாலும், நமக்குள்ளிருக்கும் பிராமணாதி ஜாதிபேதமானது ஸ்வாபாவிகமாக ஈசுவரனாலேயே தான் ஸிருஷ்டிக்கப்பட்டிருக்க வேண்டுமென்பதற்கு பிரமாணங்களைவிட லோகாநுபவமே போதுமான ஸாக்ஷியாயிருப்பதை யாரும் அறிந்துகொள்ளலாம்.

ஜாதி, குணத்தை அநுஸரித்ததென்பதில் தோஷம்.

இனி குணத்தையநுஸரித்தே ஜாதி ஏற்படுகிறதாக ஒப்புக்கொண்டால் விளையும் ஆக்ஷேபங்களைகவனிக்கவேண்டும். பிரம்மஞானம் பெற்றவன் பிராம்மணனென்றும், யுத்தத்தால் தன்னைக்காத்துக்கொள்ள சக்தி வாய்ந்தவன் க்ஷத்திரியனென்றும், கிருஷி வியாபாராதிகள் உள்ளவன் வைசியனென்றும், ஊழியம்செய்பவன் சூத்திரனென்றும் ஜாதியானது குணத்தையனுஸரித்தே ஏற்படுகிறதென்று சொன்னால் பலஆக்ஷேபங்கள் உதிக்கின்றன. ஒரே மனிதன் பிரம்மஞானமும் க்ஷத்திரியகுணமாகிய யுத்தத்தொழிலும் வைசியகுணமாகிய கிருஷி வியாபாராதிகளும் பொருந்தியவனாக இருந்தால் அவனை எந்தஜாதியில் சேர்த்து விவஹரிப்பது? பிரம்மஞானமிருப்பதைக்கொண்டு பிராமணனென்று சொல்வோமானால், க்ஷத்திரியகுணமிருப்பதற்காக க்ஷத்திரியனென்றும், வைசியகுணமிருப்பதற்காக வைச்யனென்றும் சொல்லவேண்டுமல்லவா? இம்மாதிரி ஒருவனை மூன்று ஜாதிப்பெயராலாவது, அல்லது "பிராமணக்ஷத்திரியவைசியன்" என்கிற தனியானதோர் ஜாதிப்பெயராலாவது அழைக்க நேரிடும். இது சாஸ்திரத்திற்காவது உலகநடவடிக்கைகளுக்காவது பொருந்துமாவென்று யோசிக்கவேண்டும். தவிர, பிராம்மணனுடைய பெயரின் கடைசியில் "சர்மா" என்கிற பதத்தையும், க்ஷத்திரியனுக்கு "வர்மா" என்பதையும், வைசியனுக்கு "குப்த" என்கிற பதத்தையும் உபயோகிக்கவேண்டுமென்று விதியுண்டு. கீழ்ச்சொல்லியமாதிரி மூன்று குணங்களும்பொருந்தியமனிதனுடைய பெயரில் எந்தபதத்தைச்சேர்த்து வ்யவஹரிக்கவேண்டுமென்பது ஒருவராலும் நிச்சயிக்கமுடியாதது. இதுபோல் இன்னும்பல ஆக்ஷேபங்களுண்டு. இவைகளுக்கு என்ன பதில்? இதற்குகீழ்க்

காட்டியபடி ஜாதி ஜன்மஸித்தமென்பதை அங்கீகரிக்கவேண்டியதைத்தவிர வேறு கதி கிடையாது. குருவம்சத்தில் பிரஸித்தி பெற்றவராயிருந்த பீஷ்மாசாரியார் எவ்வளவோவிதமான ஞானங்களைப்பெற்றவராயிருந்தும், அவர் 'பிராம்மணன்' என்று வியவஹரிக்கப்பட்டதில்லை. அதுபோல பிராம்மணஜன்மத்தில் பிறந்த த்ரோணாசாரியர் என்பவர் பிரம்மஞானமும் க்ஷத்திரியத்தொழிலாகிய யுத்தருசியும் பெற்றவராயிருந்தும், அவரை க்ஷத்திரிய ஜாதியில் சேர்த்து வ்யவஹரிக்காமல் அவரது ஜன்மஸித்தஜாதியாகிய பிராம்மணஜாதியிலேயே சேர்த்து வியவஹரிக்கப்படுகிறது. இதற்கு—

"अपिचाहं पुराविप्रैर्गर्हितो ब्राह्मणोवसे"

என்று த்ரோணாசாரியர் 'நான் க்ஷத்திரியத்தொழிலைக்கைகொண்டதற்காக விப்ரர்களால் நிந்திக்கப்பட்ட பிராமணனாக விருக்கிறேன்' என்பதால் தாம் பிராம்மணனென்கிற தன்னைச்சொல்லிக்கொண்டது முக்யப்ரமாணமாயிருக்கிறது. இதுபோல் அவரவர்கள் எந்தத்தொழிலைக் கைகொண்டபோதிலும், அவரவர்களுடைய ஜன்மஸித்தமான ஜாதிப்பெயராலேயே அவர்கள் வ்யவஹரிக்கப்படுவதற்கு அநேக திருஷ்டாந்தங்களுண்டு. ஆகையால் குணத்தையநுஸரித்து ஜாதியுண்டாகுமென்று வாதிப்பது பிரமாணத்திற்கும், யுக்திக்கும், உலகநடவடிக்கைக்கும் எக்காலத்திலும் ஒவ்வாதென்பது நிச்சயம்.

ஜன்மனாஜாயதே என்கிற சுலோகார்த்தம்.

இனி இரண்டாவதாகப் பூர்வபக்ஷிகள் சொல்லிய பிரமாணத்தை விசாரிப்போம். அதாவது;—எவனும் ஜநிக்கும்போது சூத்திரனாகவே ஜநிக்கிறானென்றும், ஸம்ஸ்காரங்களாலும், வித்யையாலும், பிர்மஞானத்தாலும், பிராம்மணஜாதியை யடைகிறானென்றும்,

जन्मना जायते शूद्रस्संस्काराद्द्विज उच्यते ।
विद्यया याति विप्रत्वं ब्रह्मविद् ब्राह्मणोभवेत् ॥

இத்யாதி பிரமாணங்களால் ஸ்பஷ்டமாகிறபடியால் ஜாதி ஜன்ம

ஸித்தமல்லவென்று வாதிக்கிறார்கள். இது வெகுதுர்பலமான வாதமென்று நிரூபிக்கமுடியும். இந்த சுலோகமானது ஒரு பிராமணன் தான் பிராமணஜன்மத்தில் பிறந்துவிட்டமாத்ரத்தாலேயே திருப்தியடைந்துவிடக்கூடாதென்றும், பிராமணத்தன்மைக்கு புஷ்டியைக்கொடுக்கக்கூடிய சரீரஸம்ஸ்காரம், வேதாத்யனம், பிரம்மஞானம் இவைகளை அடைவதற்கு முயற்சி செய்யவேண்டுமென்றும், அப்படிக்கன்றி பிறந்தமேனிக்கு எவ்வித ஸம்ஸ்காரமும் பெறாமலிருந்தால், சரீரஸம்ஸ்காரங்களற்ற சூத்திரனைப் போல் நினைக்கப்படுவானென்றும் சொல்லி, பிராமணன் ஸம்ஸ்காரங்களைக் கட்டாயம் பெறவேண்டுமென்று சொல்லவந்ததேயன்றி ஜாதி மாறிவிடுமென்று சொல்லவந்ததில்லை. ஏனென்றால் யாக்ஞவல்க்யஸ்மிருதியில்—

चित्रकर्मयथानेकैरङ्गैरुन्मील्यते पृथक् । ब्राह्मण्यमपि तद्वत्स्यात् संस्कारैर्विधिपूर्वकैः ॥

என்று சொல்லியபடி ஓர் சித்திரமானது அதற்கு வேண்டிய ஸகலவிதமான வர்ணவிந்யாஸத்துடனிருந்தால் தான் அது பூர்த்தியடைந்ததென்றும, ஏதாவது இரண்டொரு வர்ணவிந்யாஸம் குறைந்திருந்தால் பூர்த்தியடையாததென்றும் எப்படி நினைக்கப்படுகிறதோ அதுபோலவே பிராமணத்தன்மையும் சாஸ்த்ரோக்த ஸம்ஸ்காரங்களாலேயே பூர்த்தியடையுமென்று சொல்லப்பட்டிருப்பதை யனுஸரித்து இங்கும் ஸம்ஸ்காரமெனப்படுகிற உபநயனாதிகளால் த்விஜத்தன்மை யுண்டாகிறதென்று சொல்லப்படுகிறது. பிராம்மணஜன்மத்தில் பிறந்தவன் சரீரஸம்ஸ்காரங்களாலும், வித்யையாலும் மேன்மை அடையும்பொது அதற்கேற்றபடி கௌரவப்பெயர்கள் அவனுக்குக்கொடுப்பது நமது சாஸ்திரவழக்கம். ஸாதாரணஸம்ஸ்காரங்கள் பெற்றவனை 'த்விஜன்' என்றும், வேதாத்யனம் செய்தவனாயிருந்தால் "விப்ரன்" என்றும் "ச்ரோத்திரியன்" என்றும் நான்கு வேதங்களைக்கற்றவனை ப்ரூணன் என்றும், அனூசானன் என்றும் யோக்யதைக்கேற்றவாறு நாமதேயமும், கௌரவமும் ஏற்பட்டிருக்கிறது. அதை

யனுஸரித்துத்தான் இந்த சுலோகத்திலும் சொல்லப்பட்டிருக்கிறதென்பதை கவனிக்கவேணும். தவிர கீழ்காட்டியவசனத்தில் "ஸம்ஸ்காரத்தினால் த்விஜனாகிறான்" என்று சொல்லுகிறவாக்யத்தில் "த்விஜன்" என்கிற பதமிருப்பதைக் கவனிக்கவேணும். "த்விஜன்" என்றால்—

मातुरग्रेधिजननं द्वितीयं मौञ्जिबन्धने । २-१०४.

என்று மனு சொல்லியிருப்பதை யநுஸரித்து தாயின் வயிற்றில் பிறக்கும்போது ஓர் ஜன்மமும், உபநயன ஸம்ஸ்க்காரத்தினால் மற்றொரு ஜன்மமும் ஆக இரண்டு ஜன்மம் பெற்றவன் என்று அர்த்தமங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. இந்த த்விஜத்தன்மையானது உபநயனத்தில் அதிகாரமுள்ளவர்களான பிராமண, க்ஷத்ரிய, வைசியரென்கிற மூன்று ஜாதிகளுக்குமட்டும் கிடைக்குமேயல்லது நான்காவது ஜாதியான சூத்திரனுக்கு உபநயனமில்லாதகாரணத்தால் த்விஜன் என்கிற பெயர் கிடையாதென்றும், அவர்களை "ஏகஜாதிகள்" அதாவது தாயின் வயிற்றில் பிறக்கும்போது உள்ள ஒரேஜன்மமுள்ளவர்களென்றும்,

ब्राह्मणः क्षत्रियोवैश्यस्त्रयोवर्णाद्विजातयः ।
चतुर्थ[illegible]तिस्तु शूद्रो नास्तितु पञ्चमः ॥ १०-४.

என்பதால் முனிகள்நிர்ணயித்தார்கள். '**अशूद्राणामदुष्टकर्मणामुपायनम्**' இத்யாதி பிரமாணங்களால் த்விஜத்தன்மையைக் கொடுக்கக்கூடிய உபநயனஸம்ஸ்காரமானது சூத்திரர்களுக்குக் கிடையாதென்றே நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இவ்விஷயத்தில் எந்த ரிஷிகளுக்குள்ளும் அபிப்பிராயபேதம் கிடையாது. சாஸ்திரமர்யாதை இப்படியிருக்க, இங்கு பூர்வபக்ஷிகள் சூத்திரர்களும் உபநயனஸம்ஸ்காரத்தைப் பெறலாமென்று அர்த்தமாகும்படி மேல் காட்டிய வசனத்திற்கு வியாக்யானம் செய்வது ஸ்மிருதிகளுக்குள் முன்பின் விரோதத்தை உண்டாக்கக் கூடியதாகவிருக்கிறது. இதற்கென்ன பரிஹாரம்? தவிர இவர்கள் சொல்லுமர்த்தம் ரிஷிகளாலும் வேதத்தினாலும் அங்கீகரிக்கப்பட்டதில்லையென்பதை அவசியமாய் கவனிக்கவேணும். இவர்களுடைய அபிப்பி

4

ராயப்படி உபநயனத்திற்கு முன் யாவரும் சூத்திரஜாதி என்றல்லவோ அர்த்தம் செய்யப்படுகிறது. அப்படியானல் உபநயனத்திற்கு முந்திய அவஸ்தையில் கூட பிராமணக்ஷத்ரியாதி பேதமிருப்பதாக வேதத்திலும், ஸ்மிருதியிலும் சொல்லப்பட்டிருப்பதற்கு என்ன ஸமாதானம்? பிராமணுதிகளுக்கு உபநயனகாலத்தை நிர்ணயிக்கும்போது வேதத்தில், "गर्भाष्टमे ब्राह्मणमुपनयीत, गर्भैकादशे राजन्यं, गर்भद्वादशे वैश्यम्" என்பதால் "பிராமணனுக்கு எட்டாவது வயதிலும், க்ஷத்திரியனுக்கு பதினென்ருவதிலும், வைசியனுக்குப் பன்னிரண்டாவதிலும் உபநயனம் செய்யவேண்டுமென்று விதிக்கப்பட்டுள்ளது. இங்கு பூர்வபக்ஷிகள் சொல்லியபடி உபநயனத்திற்கு முந்திய அவஸ்தையில் யாவரும் சூத்திரர்களாயிருந்தால், ஒவ்வொரு ஜாதியையும் பிரித்து ஒவ்வொன்றுக்கும் வெவ்வேறு காலங்களை விதிப்பது எப்படித் தகும். பூர்வபக்ஷிகளின் அபிப்பிராயப்படி ஸம்ஸ்காரமோ, பிர்மஞானமோ வந்தபிறகல்லவோ பிராமண்யாதி ஜாதி உண்டாகப்போகிறது. இப்படியிருக்க வேதத்திலும், ஸ்மிருதியிலும், எவ்விதமான ஸம்ஸ்காரங்கள் பெருதவனும், வேறு எவ்வித குணங்களுமற்றவனுகயிருக்கும் குமாரனை, பிராம்மணுதி ஜாதிப்பெயரால் ரிஷிகள் வ்யவஹாரம் செய்வதைக்கவனித்தால் பூர்வபக்ஷிகள் செய்த அர்த்தம் பிசகென்றே ஏற்படும். ஆனல் கீழ்ச்சொல்லிய பிரமாணத்தில் "ஜநிக்கும்போது சூத்திரனுகவிருக்கிருன்" என்று சொல்லப்பட்டிருப்பதற்கு என்ன ஸமாதானமென்று கேழ்க்கலாம். இதற்கு ஸமாதானம் வெகு சுலபமானதே. தற்போது நம்மில் ஒருவன், பிராம்மணனுக்குறியவையான கர்மாநுஷ்டானங்களைக் கைவிட்டு ஸாமான்னியமான நடவடிக்கையுள்ளவனுகவிருந்தால் அவனை சூத்திரன் என்று விவஹரிப்பது வழக்கமாயிருக்கிறதல்லவா? இதன் அர்த்தமென்ன? அவன் சூத்திரஜாதியில் பிறந்தவனென்று பரிஹஸிக்கப்படுகிறது? இல்லை! சூத்திரஜாதியில் பிறந்தவன் எப்படி வைதிககர்மானுஷ்டானமில்லாமல் இருக்கிருனே அப்படியே இவனுமிருப்பதால் மட்டும் இவனை சூத்திர

னென்று வ்யவஹரிக்கப்படுகிறது. இங்கு "சூத்திரனைப்போலிருக்கிறான்" என்று சொல்லுவதற்குப்பதிலாக சூத்திரனென்றே வ்யவஹரிக்கப்படுகிறது. தேவதத்தன், ஸிம்மத்தைப்போலிருக்கிறான் என்று சொல்லுவதற்குப் பதிலாக அவனை ஸிம்மமென்றே வ்யவஹரிப்பதும், ரிஷி அக்கியைப்போலிருக்கிறார் என்று சொல்லுவதற்குப்பதிலாக ரிஷியை அக்நியென்றே வ்யவஹரிப்பதும் எப்படியோ, அதுபோல் இந்த பிரமாணசுலோகத்திலும், "பிறக்கும்போது சூத்திரன்போலிருக்கிறான்" என்று சொல்லுவதற்கு பதிலாக சூத்திரனென்றே வ்யவஹரிக்கப்பட்டிருக்கிறதேயல்லது சூத்திரஜாதியுள்ளவனென்று சொல்ல வரவில்லை. பிராமணதிஜாதியில் பிறந்தவர்களுக்கு உபநயனத்திற்கு முந்திய அவஸ்தையில் எவ்விதமான கர்மானுஷ்டானமும், ஆசாராதிகளும் கிடையாதென்றும், ஆஹாராதி நிர்பந்தங்கள் கிடையாதென்றும்,

" प्रागुपनयनात्कामचारवादभक्षः "

இத்யாதிகளில் சொல்லப்படுகிறபடியால் உபநயனத்திற்குமுன் வரையிலும் அவர்கள் ஸ்வச்சந்தர்களாகவிருக்கலாமென்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இப்படி ஸ்வச்சந்தமான அவஸ்தையிலிருப்பவர்களையே சூத்திரரென்று லோகத்திலும் சாஸ்திரத்திலும் உபசரித்துச்சொல்லுவது வழக்கமாயிருக்கிறது. இவ்வழக்கத்தை யநுஸரித்துத்தான் இங்கும் உபநயனமாகாத அவஸ்தையிலிருப்பவனை சூத்திரன் என்று உபசரித்துச் சொல்லப்பட்டதேயல்லது வேறு அர்த்தம் செய்துவிடுவது ஸாத்தியப்படாதது. கீழ்ச்சொல்லியமாதிரி வ்யவஸ்தையை நாம் ஸ்வச்சந்தமாகச்செய்துவிட்டதாக யாரும் நினைக்கமுடியாது. வஸிஷ்டர், உபநயனமாகாதவனின் தர்மத்தைச்சொல்லுமிடத்தில்,

नह्यस्य विद्यते कर्म किञ्चिदामौञ्जिबन्धनात् ।
वृत्त्या शूद्रसमो ज्ञेयः यावद्वेदे न जायते ॥

என்பதால் உபநயனமாகாத பிராமணதிகளுக்கு எவ்வித கர்மானுஷ்டானங்களுமில்லையாகையால் உபநயனமாகும்வரையில் அவர்கள் சூத்திரர்களுக்கு ஸமமாக எண்ணத்தக்கவர்கள் என்று

உபநயனத்திற்கு முன் அவஸ்தையிலிருப்பவர்களை சூத்திரர்களுக்கு ஸமமாக வெகு ஸ்பஷ்டமாகச் சொல்லுகிறார். இதை யநுஸரித்துத்தான் இங்கும் வ்யவஸ்தை செய்யப்பட்டதென்று பிராமாணிகர் அறியவேணும். தவிர இங்கு இன்னொருவிஷயத்தையும் கவனிக்கவேணும். கீழ்காட்டிய கௌதமசூத்திரத்தில் உபநயனத்திற்கு முந்தி ஆசார ஆஹாராதிகளில் நிர்பந்தம் கிடையாதென்று சொல்லப்படவே, உபநயனத்திற்கு முன் ஸுராபானம் செய்வதும் தோஷமற்றதாகையால் அதைச் செய்யலாமென்று ஆக்ஷேபமுண்டாகவே,

" नित्यं मद्यं ब्राह्मणस्य "

என்கிற அடுத்த ஸூத்ரத்தால் "பிராமணனுக்கு ஸுராபானம் எப்போதும் அதாவது பிறந்ததுமுதல் தடுக்கப்படுகிறது" என்று ஓர் விலக்குவிதி சொல்லப்பட்டது. இங்கு உபநயனத்திற்குமுன் யாவரும் சூத்திரர்களானால், ஸூத்திரத்தில் "ब्राह्मणस्य" என்பதற்குப்பதிலாக "शूद्रस्य" என்றல்லவோ சொல்லவேணும். இப்படியில்லாமல் ஒரு ஜாதியின் பேரைமட்டும் குறிப்பிட்டு அதற்குமட்டும் ஸுராபானத்தில் தோஷமுண்டென்று சொல்லப்படுவதைக் கொண்டும் உபநயனத்திற்கு முன்கூட ஜாதிவிபாகமுண்டென்பது எவ்விதத்திலும் ஆக்ஷேபிக்கமுடியாதென்று ஸ்பஷ்டமாகிறது. ஆகையால் "யாவரும் பிறக்கும்போது சூத்திரர்களாயிருக்கிறார்களென்று சொல்லுகிற "ஜன்மனாஜாயதே சூத்ர;" என்கிற வசனத்தைக்கொண்டு ஜாதி ஜன்மஸித்தமல்லவென்றும், கர்மத்தினாலேயே ஏற்படுமென்றும் நிரூபித்துவிடுவது முடியாது.

" சூத்ரயோனௌ " என்கிற சுலோகார்த்தம்.

இதன்பிறகு பூர்வபக்ஷிகள் மூன்றாவதாகச் சொல்லிய ஆக்ஷேபமென்னவென்றால், "சூத்ரஜாதியில் பிறந்தவனாயிருந்தாலும், ஸத்குணங்களுள்ளவனாயிருப்பானாகில் அவனுக்கு வைசியத்தன்மையும், க்ஷத்திரியத்தன்மையும், பிராமணத்தன்மையும உண்டாகும்" என்று " शूद्रयोनौ प्रजातस्य "
என்கிற பிரமாணததால் தெரிகிறபடியால் ஜாதி கர்மஸித்தமென்

பது தான் சாஸ்த்திரஸம்மதமாகும், என்று வாதிக்கப்படுகிறது. இங்கு காட்டப்பட்ட வசனத்திற்கு நியாயத்தையும், வேறு பிரமாணங்களைக்கொண்டும், வாஸ்தவமான அபிப்ராயமென்னவென்பதை விமர்சித்துப பார்க்கவேணும். சுருதிகளிலோ, ஸ்மிருதிகளிலோ, முன் பின் விரோதமுள்ளவைபோல் காணபபடும் வசனங்களுக்கு நியாயபலத்தையும், இதர பிரமாணங்களையும் கொண்டு ஸமரஸமான அர்த்தத்தைக் கண்டுபிடிக்கவேண்டுமென்பது தான் சாஸ்திரஸம்மதமான மார்க்கமாகும். நாம் இதுவரையில் சொல்லிவந்த வேதம் முதலிய பிரமாணங்களைக்கொண்டும், ஜாதிஜந்மஸித்தந்தானென்பது ஸித்தாந்திதவிஷயமாயிருக்கிறது. அவ்விதம் சொல்லுகிற சுருதி, ஸ்மிருதி முதலிய பிரபல பிரமாணங்களுக்கு நேர் விரோதமான அர்த்தத்தைக் கொடுக்கிற இந்த வசனத்திற்கு மற்ற பிரமாணங்களுடன் ஸமரஸபாவத்தையுண்டு பண்ணி வாஸ்தவார்த்தத்தைச் சொல்லவேணும் அப்படிச் சொல்லப்புகுந்தால் இந்த வசனத்தால் பூர்வபக்ஷிகளுக்கு எவ்வித ஸாதகமுமில்லையென்பது ஸ்பஷ்டமாகக்கூடியது. இந்த வசநத்தில் சூத்திரஜாதியில் பிறந்தவன் ஸத்குணங்கள் உள்ளவனாக இருந்தால் அவனுக்கு உயர்ந்தஜாதி ஏற்படுகிறதாகச் சொல்லப்பட்டிருந்தாலும், அம்மாதிரி ஜாதிமாறுதல் இந்த சரீரத்திலேயே உண்டாகுமா அல்லது ஜந்மாந்திரத்திலா என்கிற ஸம்சயம் உதிக்கிறபடியாலும் அதை நிர்ணயித்துக்கொடுக்க மேற்படி வசனத்தில் இடமில்லையாகையாலும், வேறு இடங்களிலுள்ள வசனங்களைக்கொண்டு தான் அர்த்தத்தை நிர்ணயிக்கவேண்டியிருக்கிறது.

ஜன்மாந்தரத்தில் தான் ஜாதி மாறும்.

ஜாதி மாறுதலைப்பற்றி ஆபஸ்தம்ப, மனு, யாக்ஞவல்க்யாதிஸ்மிருதிகர்த்தாக்கள் ஸித்தாந்தம் செய்யும்போது, ஒரு ஜாதியில் பிறந்தவனுக்கு அந்த சரீரத்திலேயே எக்காரணத்தைக்கொண்டும், ஜாதி உயர்ந்ததாகவோ, தாழ்ந்ததாகவோ மாறிவிடாதென்றும், ஏதாவது ஸுகிருத, துஷ்கிருதவசத்தால் ஜாதி மாறுவதாயிருந்தால் அது வேறு ஜந்மத்தில்தான் மாறுமென்

றும் வெகு தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். இது விஷயமாக மனுவின் அபிப்பிராயத்தைப் பார்க்கலாம். அவர் சொல்லுவதாவது—

तपोबीजप्रभावैस्तु ते गच्छन्ति युगेयुगे ।
उत्कर्षञ्चापकर्षञ्च मनुष्येष्विह जन्मनः ॥ (म-१०-४२)

மனிதன் தபஸ்என்கிற ஸத்கர்மததினுலும், பீஜத்தின் யோக்யதையாலும், உயர்வையோ தாழ்வையோ ஒவ்வொருஜன்மத்திலும் அடைகிறன் என்றார். இதை அடுத்த வசனங்களால் ஸ்பஷ்டமாக விளக்கிக்காட்டுகிறார்.

"अश्रेयान् श्रेयसीं जातिं गच्छत्यासप्तमायुगात् " ॥
"शूद्रो ब्राह्मणतामेति ब्राह्मणश्शूद्रतामपि" ॥ (म-१०-३५)

"தாழ்ந்தஜாதியான் ஸத்கர்மங்களடியாக ஏழாவது ஜன்மத்தில் உயர்ந்த ஜாதியை அடைகிறன். எப்படியென்றால் சூத்திரன் ஒரு ஜன்மத்தில் செய்த ஸுகிருதங்கள் நிமித்தமாக அடுத்த ஜந்மத்தில் வைசியஜாதியை அடைகிறன். அதன்பின் க்ஷத்ரியத்தன்மையையும், பிறகு பிராமணஜாதியையும் வரிசையாக அடைகிறன். அதுபோல் துஷ்டகர்மங்களைச் செய்துவருகிற பிராமணன், ஒவ்வொரு ஜன்மமாகத்தாழ்ந்து கடைசியில் அதவாவது ஐந்தாவது ஜந்மத்திலோ, ஏழாவதிலோ, சூத்திரத்தன்மையை அடைகிறன. இவ்விரு மனுவசனங்களையும் ஸங்கரஜாதிவிஷயமாக சில வியாக்யாதாக்கள் அர்த்தம் செய்திருந்தாலும், இரண்டொருவர்கள் செய்த வ்யாக்யானத்தை யநுஸரித்தே நாம் இங்கு பிரஸ்தாபித்தோம். எப்படியிருந்தாலும் ஒரே சரீரத்தில் ஜாதி மாறிவிடாதென்பதற்கு இந்த மனுவசனங்கள் முக்யப பிரமாணங்களாகத் தடையில்லை. இதுபோல் யாக்ஞவல்க்யஸ்மிருதியிலும், " जात्युत्कर्षो युगे ज्ञेयः पञ्चमे सप्तमेऽपि वा " என்பதால் ஒருஜாதிக்கு உத்கர்ஷம் அதாவது மேன்மை ஏற்படுவதாயிருநதால் ஐந்து அலலது ஏழாவது ஜந்மத்தில் தான் அது ஏற்படும் என்று சொல்லப்பட்டது. இதுவும் நிற்க ஆபஸ்தம்பமஹர்ஷி,

धर्मचर्यया जघन्यो वर्णः पूर्वं पूर्वं वर्णमापद्यते जन्मपरिवृत्तौ ॥

(ஆ-2-5-11-10) என்கிற சூத்திரத்தில் "கீழ்வர்ணத்தியவன் தர்மாசரணத்திஞலே தனக்கு முந்திய வர்ணத்தை அடைவான். எப்போது? ஜன்மபரிவிருத்தியில். அதாவது ஜன்மம்மாறும்போது" என்று வெகு ஸ்பஷ்டமாகச் சொன்னர். இம்மாதிரி பிரபலமான ஸ்மிருதிகள் எல்லாம் ஒற்றுமையுடன், ஜாதி ஒருசரிரத்தில் மாருதென்றும், ஐந்தாவது ஏழாவது ஜன்மத்திலேயே மாறுமென்றும் வ்யக்தமாகச்சொல்லியிருப்பதை யநுஸரித்துத் தான் பூர்வபக்ஷிகள் வெளியிட்ட வசனங்களுக்கு அர்த்தம் செய்யவேண்டியிருக்கிறது. அவ்விதம் அர்த்தம் செய்தால் "சூத்ரஜாதியில் பிறந்தவன் ஸத்கர்மங்களுள்ளவஞகில் அவன் வேறு ஜன்மத்தில் வைசியஜாதியையோ அல்லது வேறு உயர்ந்தஜாதியையோ கிரமமாக அடைகிருன்" என்று தான் ஸித்தாந்தமாக ஏற்படுகிறது. இவ்விஷயத்தைப்பற்றி மஹாபாரதத்தில் சொல்லப்பட்டிருப்பதும் இங்கு கவனிக்கத்தக்கது. பார்வதீதேவி தனது பர்த்தாவைப் பார்த்து கேழ்க்கும்போது

इमे हि वर्णाश्चत्वारः विहिताः स्वस्वभावतः ।
उताहोक्रियया वर्णास्सम्भवन्ति महेश्वर ॥

என்பதால் நான்கு வர்ணங்களும் ஸ்வபாகமாக ஏற்பட்டவையா? அல்லது குணத்தையநுஸரித்து ஏற்பட்டவையா? என்று பிரச்னம் செய்யவே

स्वभावादेवविद्यन्ते चत्वारो ब्राह्मणादयः । एकजात्या सुदुष्पाप मन्यवर्णत्वमत्रहि । तच्च कर्मविशेषेण पुनर्जन्मनि विन्दते ॥

என்பதால் பிராமணுதி நான்குவர்ணங்களும் ஸ்வபாவமாகவே ஏற்பட்டவை என்றும, ஒரு ஜன்மத்தில் ஒருவன் வேறு ஜாதியை அடையமுடியாதென்றும், அதை கர்மவிசேஷத்திஞல் அடுத்த ஜன்மத்தில் அடைகிருனென்றும் பதில் சொல்லப்பட்டது. இந்த மஹாபாரதபிரமாணங்களும் கீழ்ச்சொல்லிய ஸ்மிருதிகளின் அபிப்பிராயத்தையே பலப்படுத்துகின்றன. ஆகையால் பிரகிருத வசனத்தில் சொல்லப்படுகிற ஜாதி மாறுதலானது வேறு ஜன்மத்தில் தான் என்று ஸித்தாந்திதமாயிற்று.

ஜாதி மாறுதென்பதற்கு உதாஹரணங்கள்.

இவ்வித ஸமாதானந்தான் பிரமாணஙகளுக்கு அநுகுணமாயிருப்பதுடன், முன்னோர்களுடைய நடவடிக்கைக்கும் ஒத்ததாகயிருக்கிறது. முன்காலத்தில், க்ஷத்ரிய, வைசிய, சூத்ராதி ஜாதிகளில் பிறந்தவர்கள் பலர் சிறந்த ஞானிகளாயிருந்தும் அது நிமித்தமாகத் தங்களது ஜாதி மாறிவிட்டதாக அவர்கள் நினைத்ததுமில்லை, சொல்லியதுமில்லை. விதேஹதேசாதிபதியும், மஹாப்ரம்மஞானியுமாகியஜனகமஹாராஜன் அவ்வளவு ஸத்குணங்கள் பொருந்தியவராயிருந்தும் அவரது க்ஷத்ரியஜாதி மாறியதாகத் தெரியவில்லை. விதுரரென்கிற மகாஞானியொருவர் சூத்திரஜாதியில் பிறந்திருந்தும் அவருடைய ஸச்சரிதத்தையும், ஞானத்தையும், தர்மசிந்தையையும் பார்த்து ஆச்சரியமடையாத ஒருவரும் அக்காலத்தில் கிடையாது. ஆயினுமென்ன? இவ்வளவு குணங்களிருநதும் அவர் தன்னை பிராமணனென்று சொல்லிக்கொண்டாரோவெனில் கிடையாது. இவரிடமிருந்து தர்மபுத்திரர், பலதர்மசம்சயங்களைத் தெளிந்துவரும்போது விதுரர் பல விஷயங்களைச் சொல்லிவிட்டு

" शूद्रयोनावहंजातोनातोन्यद्वक्तुमुत्सहे "

என்பதால் "நான் சூத்திரயோநியில் பிறந்தவனுகையால் இதன்மேல் தர்மவிஷயங்களைச் சொல்ல ஸம்மதிக்கமாட்டேன்" னென்று சூத்திரர் சொல்லத்தகாத பல தர்மங்களைச்சொல்ல மறுத்துவிட்டதாகத் தெரிகிறது. இங்கு இவருக்கு ஜாதி மாறி பிராம்மண்ணியம் உண்டாயிருந்தால் ஏன் இப்படிச் சொல்லவேணும்?

வைஷ்ணவஸம்பிரதாயமும் ஜாதிபேதமும்.

இதுபோல் வைஷ்ணவஸம்பிரதாயத்தில் "அமலனுதிப்பிரான்" முதலிய பிரபந்தங்களால் மேற்படி மதத்திற்கு விசேஷ உபகாரம் செய்தவரும் வைஷ்ணவர்களால் வெகுவாகக் கொண்டாடப்பட்டவருமான "திருமழிசையாழ்வார்" என்கிற மகாஞானியொருவர் தாழ்ந்தஜாதியில் பிறந்தவரென்பது சரித்திரமூலமாகத் தெரிந்தவிஷயம். அவர் அவ்வளவு ஞானவைராக்யாதி

திவ்ய குணங்கள் பெற்றிருந்தும் தன்னை பிராமணனென்ருவது வேறு உயர்ந்தஜாதியென்ருவது சொல்லிக்கொள்ள இஷ்டப்பட வில்லை. ஒரு சமயம் திருமழிசையாழ்வார், எங்கேயோ போய்க் கொண்டிருக்கும்போது ஒரு இடத்தில் வேதாத்யயனம் செய்து கொண்டிருந்த சிலர், இவர் தைவாம்சம் பொருந்தியவரென்பதை அறியாமல் இவர் காதில் வேதசப்தம் விழக்கூடாதென்று நினைத்து அத்யயனத்தைச் சொல்லாமல் நிறுத்திவிட்டார்கள். ஆழ்வார் சிறிதுதூரம் சென்றபிறகு மறுபடியும் அவர்கள் அத்யயனத்தை சொல்ல ஆரம்பிக்கும்போது விட்ட இடம் தெரியாமல் விழிக்கத் தொடங்கினர். எவ்வளவு சிரமப்பட்டும் அவர்களுக்கு வேத வாக்யங்கள் நினைப்புக்கு வராமல்போகவே இது ஆழ்வாருடைய அபசாரத்தால் ஏற்பட்டிருக்கலாமென்று நினைத்தோடி ஆழ்வாரிடம் க்ஷமாபணம் செய்துகொண்டு பிரார்த்தித்தார்கள். ஆழ்வாரும் கிருபையால் வேதத்தில்விட்ட இடத்தை தனது கைஜாடையால் சொல்லிக்கொடுத்தாராம். அதாவது தாம் தாழ்ந்தஜாதியில் பிறந்தநிமித்தமாக வேதசப்தங்களை உச்சரிப்பது தகாதென்று நினைத்து ஸமீபத்தில் கடந்த கருப்பு நெல் ஒன்றைத் தனது நகங்களால் உரித்துக்காண்பிவித்து இவ்வித அர்த்தமடங்கிய "कृष्णानां व्रीहीणां नखनिर्भिण्णम्" என்கிற வாக்கியத்தை ஜாடையால் அவர்களுக்கு ஸ்மரிப்பித்தார் என்று சரித்திரம் உத்கோஷிக்கிறது. ஆழ்வாரைவிட ஞான பக்தி வைராக்யாதி குணங்களைப்படைத்தவரும் அக்காலத்திலுண்டோ? அப்படியிருந்தும் அவர் வேதசப்தங்களைப் பிராமணேதரர்கள் உச்சரிக்கக்கூடாதென்கிற விதியில் கட்டுப்பட்டு தன் வாயினல் அவைகளை உச்சரிக்காமல் விட்டார். இவருக்கு ஜாதிமாறி குணநிமித்தமாக பிராமணியம் ஏற்பட்டிருந்தால் ஏன் இப்படிச் செய்யவேணும்? இதுபோலவே இன்னும் சில ஆழ்வார்களும் வேறு ஜாதியில் பிறந்தவர்களாயிருந்தும் அவரவர்களுடைய ஜாதிமர்யாதைகளைச்சிறிதாவது அதிக்கிரமித்ததாகத் தெரியவில்லை. இப்படியிருக்க ஸ்ரீராமாநுஜரும் இன்னும் சிலஆசாரியர்களும் ஜாதிவ்யவஸ்தைகளை ஒப்புக்கொள்ளவில்லையென்று திருத்தக்காரர்கள் பிரஸங்கங்களிலும்

5

பத்திரிகைகளிலும் கூச்சலிடுவது வெறும பிதற்றலென்றேசொல்லவேணும். விஷ்ணுபக்தனான சூத்ரனை விசேஷமாக கௌரவிக்கவேணுமென்பதை அவர்கள் வற்புறுத்தினர்களேயல்லதுசாஸ்திர விருத்தமான காரியங்களை அவனுடன் செய்யும்படி எங்கும் யாரும் சொல்லவில்லை. ஸ்ரீராமாநுஜர் பிரும்மஸூத்திரம் ,,அபசூத்திராதிகரண" பாஷ்யத்தில்சூத்திரர்களுக்கு வேதத்திலும் பிரும்மவித்தையிலும் அதிகாரம் கிடையாதென்பதை ஸித்தாந்தம் செய்தார். அவர் விஷ்ணுபக்தர்களான சூத்திராதிகளுடன் விவாஹாதிஸம்பந்தத்தையாவது, போஜனப்பிரதிபோஜனுதிகளையாவது செய்ததாக எங்கும் சொல்லக்காணும். இதை யாரும் ஒப்புக்கொள்ளவுமில்லை. சூத்ராதிகளுடைய ஸம்பந்தம் பெற்ற அன்னபானுதிகளால் மனஸ்சுத்தியேற்படாதென்று பலவிடங்களில் அவர் வெளியிட்டிருக்கிறர். இப்படியிருக்க, ஸ்ரீராமாநுஜாதிகளுக்கு ஜாதிவ்யவஸ்தைகளில் அபிமானமில்லையென்று சொல்லுவது எப்படித்தகும்? அவர்கள் தங்களது கிரந்தங்களில் வாயிட்டுச்சொல்லிய ஸித்தாந்தத்திற்கு விரோதமாக நடந்தார்களென்று எப்படிச்சொல்லுவது? அவர்களது ஸித்தாந்தமொழிகளுக்கு விருத்தமான சரித்திரமொன்று இருக்குமாகுல் அது எவ்வளவுதூரம் நம்பத்தக்கது? ஆகையால் ஸ்ரீராமாநுஜாதி ஆசாரியர்கள் வர்ணுசிரமதர்ம தூஷகர்களென்று விவேகமும், வித்யையும் உள்ள எந்த மனிதனும் சொல்லத்துணியமாட்டான். ஆனதாலேயே ஸ்ரீராமாநுஜருக்குப் பிற்பட்ட ஸ்ரீவேதாந்ததேசிகாதி ஆசாரியர்களும்

वैष्णवत्वेन मान्यत्वं समानं मुनिसम्मतम् ।
जात्यादिध्वंसतस्साम्यं मुक्तिकाले भविष्यति ॥

இத்யாதிகளில் பிராமணனல்லாத வைஷ்ணவனை ,,விஷ்ணுபக்தன்"என்கிற பெருமையை முன்னிட்டு கௌரவிக்கவேணுமென்றும், பிராமணனல்லாத வைஷ்ணவனுக்கு, பிராமணவைஷ்ணவனுடன் ஜாதியால் ஸமத்துவமானது இந்த சரீரம் நசித்து முக்தியுண்டாகும்போது தான் ஏற்படுமென்றும் நிர்ணயித்திருக்கிறர்

கள். இப்படியெல்லாம் முன்னோர்கள் சொல்லியிருக்க, ஜாதிவி ஷயமாக ஆசாரியர்களின் தலையில் பழிசுமத்தப்பார்ப்பது அடாத காரியமேயாகும். ஆகையால் ஒருவனுக்கு ஒரே சரீரத்தில் ஜாதிமாறுமென்பதற்கு வைஷ்ணவஸம்பிரதாயத்திலேயே இது போல் பல உதாஹரணங்களுண்டு. இதுபோல் ஸ்ரீராமாயணத்திலும், தசரதன் ஒரு ஸமயத்தில் ஸரயூநதியில் தீர்த்தமெடுத்துக்கொண்டிருந்த ரிஷியொருவரை யானை என்கிற பிரமத்தினால் சப்தவேதியென்கிற பாணத்தைக்கொண்டு அடித்துத் தள்ளியபிறகு அவர் ரிஷியென்பதைத் தெரிந்துகொண்டு வருத்தப்பட்டுக் கொண்டிருக்கையில் ரிஷி சிறிது பிரக்ஞையடைந்து தசரதனைப் பார்த்துக் கண்டித்துவிட்டு ,,நான் பிராமணஜந்மத்தில் பிறந்தவனல்லவாகையால் பிரம்மஹத்யாதோஷம் உனககு ஏற்படாது'' தென்று

न द्विजातिरहं राजन् माभूत्तेमनसोव्यथा ।
ब्रह्महत्याकृतं पापं हृदयादपनीयताम् ॥

என்பதால் தசரதனுக்கு ஸமாதானம் சொல்லியிருக்கிறதைப் பார்க்கலாம். வால்மீகிமஹர்ஷியால், முனி என்றும், ரிஷியென்றும் வ்யவஹரிக்கப்பட்டவரும், தபஸ் ஞானம் முதலிய குணங்கள் பொருந்தியவருமான இந்த ரிஷி ,,தான் பிராமணனல்லவென்றும், பிராமணனைக்கொன்றதால் உண்டாக்கக்கூடிய பிரம்மஹத்திதோஷம் உனக்கு ஏற்படாதென்றும்'' ஒளிமறைவில்லாமல் ஏன் சொல்லவேணும்? பிராமண்ணியத்தை யடையக்கூடிய குணகர்மங்கள் எவ்வளவோ இவரிடமிருந்தும் தனக்கு பிராமண்ணியம் உண்டாகிவிட்டதாக இவர் நினைத்தாரா? இல்லை ஆகையால் ஒரு சரீரத்தில் ஒருவனுக்கு ஜாதிமாறுதென்றே ஏற்படுகிறது. இன்னுமிதுபோல் பல சரித்திரங்களையும், பிரமாணங்களையும், நியாயங்களையும் நன்றாக விமர்சித்துப்பார்த்தால் ,,சூத்ரயோநியில் பிறந்தவனுக்கு ஸத்குணங்களால் ஜாதிமாறிவிடுகிற'' தென்று சொல்லுகிற "शूद्रयोनौ प्रजातस्य" என்கிற வசனத்திற்கு ஜந்மாந்தரத்தில் தான் ஜாதிமாறுமென்கிற அர்த்தமே நியாயமானதென்பது ஸ்பஷ்டமாகிறது.

உயர்ந்தஜாதி கெட்டகாரியத்தினுலும் மாருதென்பது.

இங்கு சூத்திரன் ஸத்கர்மங்களினுல் எப்படி அதேசரீரத்தில் ஜாதியை மாற்றிக்கொள்ளமுடியாதோ, அப்படியே மேல்ஜாதியில் பிறந்தவனுக்கு ஹீனகர்மங்களால் அந்த சரீரத்திலேயே தாழ்ந்த நிலைமை உண்டாகாதென்பதும் ஸ்பஷ்டமாயிற்று. முன் உதாஹரித்த "उत्कर्षश्चापकर्षश्च"என்றும், ‹‹ब्राह्मणश्शूद्रतामपि" என்றும் வசனங்களை யநுஸரித்து தாழ்ந்தஜாதியோா எப்படி எவ்வித ஸத்குணங்களுள்ளவராயினும் ஒரு ஜந்மத்தில் அவருடைய ஜாதி உயராதென்று சொல்லப்பட்டதோ அப்படியே பிராமணுதிகள் எவ்வளவு நீசகர்மங்களைச் செய்தாலும் அதனடியாக வேறு சரீரத்தில் அவர்களுக்குத் தாழ்ந்தஜாதி ஏற்படுமேயல்லது இந்த சரீரத்திலேயே ஏற்படாதென்று மனு யாக்ஞவல்க்யாதி வசனங்களால் வெளியாகிறது. இவ்விஷயத்தைப் பறறிய ஆபஸ்தம்பசூத்திரமும் இங்கு கவனிக்கத்தக்கது.

" अधर्मचर्यया पूर्वो वर्णो जघन्यं जघन्यं वर्णमापद्यते जन्मपरिवृत्तौ "

அதாவது ‹‹மேல் வர்ணத்தில் பிறந்தவன் அதர்மமான நடவடிக்கையால் தனக்குக் கீழ் கீழ் உள்ள வர்ணத்தை அடைகிறுன். எப்போதென்றுல் ஜந்மம் மாறும்பொழுது" என்று ஸ்பஷ்டமாகச் சொன்ஞர். இதற்கு உதாஹரணமாக மனுவசனத்தில் ‹‹ब्रा-ह्मणश्शूद्रतामपि" என்கிற பாகத்தை எடுத்துக் கொள்ளலாம். பிராம்மணன் அந்த சரீரத்தில் செய்த துஷ்கார்யங்கள் நிமித்தமாக அடுத்த சரீரத்தில் க்ஷத்திரியஜாதியையும் அங்கு செய்யும் துஷ்கர்மமடியாக அடுத்த ஜந்மத்தில் வைசியத்தனத்தையும் அடைந்து கடைசியில் சூத்திரனுகிவிடுகிறுன் என்று கீழ்ச்சொல்லிய பிரமாணங்களால் வ்யக்தமாகிறது. ஆனுல் சிலமஹத்தான தோஷமடியாக பிராமணன் அடுத்த ஜந்மத்திலேயே தாழ்ந்தஜாதியை அடைந்துவிடுவதாகவும் சில பிரமாணங்களால் வெளியாகிறது. எப்படியாயினும் ஒரேசரீரத்தில் அவனது ஜாதிதாழ்ந்துவிடாதென்பது நிச்சயம். ஸ்மிருதிகளில் நீசகர்மங்களைச் செய்கிற பிராமணன், பதிதனென்றும், சூத்திரனென்றும் அங்காங்கு சொல்

லப்படுவது வாஸ்தவமாயினும், அதற்கெல்லாம் கீழ்ச்சொல்லிய படி வேறு ஜங்மத்தில் என்றுவது அல்லது அவன் பிராமணகர் மங்களுக்குத் தகாதவன் என்றவிதத்திலாவது அர்த்தம் செய்ய வேணும், உதாஹரணமாக மனுஸ்மிருதியில் சொல்லியிருப்பு தைப் பார்ப்போம். அங்கு

योऽनधीत्यद्विजोवेद मन्यत्र कुरुते श्रमम् ।
सजीवन्नेवशूद्रत्व माशुगच्छति सान्वयः ॥ २--१६८.

என்பதால் ,,பிராமணன் வேதத்தை அத்யயனம் செய்யாமல் வேறுவித்யையில் சிரமப்படுவாளுகில், அவன் உயிருடனேயிருக்கும் பொழுதே சூத்திரனுகிவிடுகிறுன்'' என்று சொல்லப்படுகிறது. இதுபோல்—

सद्यः पतति मांसेन लाक्षया लवणेन च ।
त्र्यहेण शूद्रीभवति ब्राह्मणः क्षीरविक्रयात् ॥ म. १०–९२.

என்பதால் ,,பிராமணன் ஆபத்காலத்தில்கூட தடுக்கப்பட்டவைகளான மாம்ஸம், சாயம், உப்பு இவைகளுடைய வியாபாரத்தைச் செய்வதால் உடனே பதிதனுகிறுன். அதுபோல் பால் விற்பனை செய்யும் பிராமணன் மூன்று தினங்களில் சூத்திரனுகிவிடுகிறுன்'' என்றும் சொல்லப்பட்டது. இன்னுமிதுபோல் பல விடங்களிலும் உண்டு. இவ்விடமெல்லாம் பிராம்மணன், சூத்திரனுகிவிடுகிறுன் என்று சொல்லப்பட்டிருப்பதற்கு, நீச கர்மங்கள் செய்யும் பிராமணன் இனி பிராமணகர்மங்களைச் செய்யத்தகுதியற்றவன் என்று சொல்லி அவனை சூத்திரனுக்கு ஒப்பிட்டுச் சொல்லியதேயல்லது அவனது ஜாதி மாறிவிடுவதாகச் சொல்லவரவில்லை. இதுபோல் சூத்திரனும், ,,காராம்பசுவின் பாலைக்குடிப்பதாலும், பிராமணஸ்திரீ ஸம்பந்தத்தாலும், வேதாக்ஷரங்களைச் சொல்லுவதாலும் சண்டாளத்தன்மையை அடைகிறுன்'' என்று

कपिलाक्षीरपानेन ब्राह्मणीगमनेन च ।
वेदाक्षरविचारेण शूद्रश्चण्डाळतां व्रजेत् ॥

என்பதால் மனு சொல்லியிருப்பதற்கும் சூத்திரஜாதி மாறி சண்டாளஜாதி வந்துவிடுகிறதாக அர்த்தம் செய்யக்கூடாது. அப்படி அர்த்தம் செய்தால் கீழ் உதாஹரிக்கப்பட்ட மனு யாக்ஞவல்க்ய ஆபஸ்தம்பாதிகளுடைய பிரமாணங்களுக்கு நேர் விரோதமுண்டாகுமென்பது வ்யக்தமானது. இவ்வித அர்த்தந்தான் கொள்ளத்தகுந்ததென்பதற்கு உலகதிருஷ்டாந்தத்தையும் பார்க்கலாம். நல்ல ஜாதியிலுண்டான குதிரையொன்று தகுந்தபோஷணையற்று நாளுக்குநாள் மெலிந்துபோய்விட்டால் அதைப்பார்த்து "இந்தக் குதிரை நாயாகப்போய்விட்டதே" என்று சொல்லி ஜனங்கள் அநுசோசிப்பது வழக்கமில்லையா? இங்கு குதிரையை நாயென்று சொல்லுவதற்கு வாஸ்தவமான அர்த்தம் என்ன? குதிரையின் ஜாதிமாறி நாய்ஜாதி அதற்கு வந்துவிட்டதென்று அர்த்தம்? இல்லை. நாய் எப்படி பாரங்களை வஹிக்கவோ இழுக்கவோ சக்தியற்றதோ அதுபோல் இதுவும், என்றல்லவோ வாஸ்தவமான அர்த்தம். இதுபோல் மனிதர்களில் மூர்க்கத்தனமான நடவடிக்கையுள்ளவனைப்பார்த்து "இவன் மாடு" என்று சொல்லுவது வழக்கமில்லையா? இங்கு அவனுக்கு மனிதஜாதி மாறி மிருகஜாதி ஏற்பட்டுவிட்டதாக நினைக்கமுடியுமா? ஆகையால் பிராமணாதிகளை சூத்திரனென்று சாஸ்திரங்கள் சொல்லுமானால், இனி அவன் பிராமணகர்மங்களுக்குத்தகாதவன் என்று அர்த்தம் செய்யவேண்டுமே யல்லது அவனுடைய ஜாதி மாறிவிடுகிறதாகச் சொல்லமுடியாது. தவிர நமது சாஸ்திரங்களில் பிராமணாதிஜாதிகளை இரண்டுவகையாகப் பிரித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. பரம்பரையாக பிராமணனுக்கு பிராமணஸ்திரீயிடத்திலும், க்ஷத்திரியனுக்கு க்ஷத்திரியஸ்திரீயிடமும் இதுபோல் அந்தந்தஜாதி புருஷனுக்கு ஸமானஜாதிஸ்திரீயிடம் பிறந்தவன் என்கிற முக்கியமான உரிமையை முன்னிட்டுவரும் பிராமண்யாதிஜாதி ஒன்று. இந்தமாதிரி ஸமானஜாதிஸ்திரீபுருஷர்களிடம் ஜனித்த பிராமணாதிகளுக்குத் தான் உபநயனம் முதலிய வைதிககர்மங்களில் அதிகாரமுண்டு. மற்றொன்று காரணப்பெயரால் ஏற்பட்டதாகும். அதாவது ஸம்ஸ்க்காரங்களாலும், வித்யையாலும்

மேன்மைபெற்றவன் இத்யாதி காரணஙகளால் உண்டாகக் கூடியது. இந்த ஜாதிப் பெயர் காரணநிமித்தமாக ஏற்பட்ட கௌரவப்பெயரேயல்லது இதனுல் ஜாதிநிர்ணயம் ஏற்படமுடியாது. உதாஹரணமாக ஒரு பிராமணன் தனது முக்கியதர்மங்களேக்கை விட்டு வைசியத்தொழிலேயோ, அல்லது சூத்திரதொழிலேயோ ஆபத்காலத்தில் கைகொள்ளுவானுகில் அவனுக்கு „பிராம்மணனுக்கு பிராமணஸ்திரீயிடம் பிறந்த" நிமித்தமாயேற்பட்ட பிராமண்ணியத்துடன் காரணநிமித்தமாக ஏற்பட்ட வைசியத்தன்மையும், சூத்திரத்தன்மையும் இருப்பதைக்கொண்டு, அவனே „பிராமணவைசியனென்ருவது, பிராமணசூத்திர" னென்ருவது வ்யவஹரிக்க சாஸ்திரம் ஸம்மதிக்கிறது. ஆனுல் அவனுடைய தொழில் நிமித்தமாக பிறப்பு ஜாதி மாறமுடியாதென்று சாஸ்திரமர்யாதை சொல்லுகிறது. இதனுல் என்ன ஏற்படுகிறதென்ருல் ஸத்கர்மங்களில்லாத பிராமணனுக்கு ஸம்ஸ்க்காராதிகளால் உண்டாகக்கூடிய காரணப்பெயரான பிராமண்ணியம் இல்லாமல் போயினும் பிறப்புரிமையால் ஏற்பட்ட பிராமண்ணியம் அழிக்க முடியாதென்பது அறியக்கூடியதே. பிராமணனுக்கு பிராமணஸ்திரீயிடம் பிறந்த உறிமையால் உண்டாயிருக்கும் பிராமணத் தன்மையை வேறு ஜந்மத்தில் மாற்றுவது ஸாத்தியமேயல்லது, ஒருவனுக்குப் பிறந்துவிட்டதை, ஒரு சரீரத்தில் எப்படி மாற்றிக்கொள்ளமுடியுமென்பதை நன்ருக யோசிக்கவேணும். ஆகையால் பிராமணனுக்கு கர்மபிராமண்ணியம் துஷ்கர்மநிமித்தமாக நசித்துப்போனுலும் ஜாதி பிராமண்ணியம் அழிக்கமுடியாதென்றே ஏற்படுகிறது. இவ்வித அபிப்பிராயங்களே மனதிற் கொண்டு தான்,

" विद्यातपोभ्यां हीनस्तु जातिब्राह्मण उच्यते "

இத்யாதிகளில் „வித்யை, தபஸ் என்கிற கர்மானுஷ்டானம், இவைகளேக் கைவிட்டவன் „ஜாதிபிராமணன்" என்று வ்யவஹரிக்கப்படுகிருன்" என்று ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டது. ஆகையால் சாஸ்திரங்களில் எங்கேயாவது பிராமணனே சூத்திரனென்

ருவது சூத்திரனை பிராமணனென்றுவது வ்யவஹரித்திருந்தால் அங்கெல்லாம் கீழ்ச்சொல்லியமாதிரியே தான் ஸமாதானம் செய்துகொள்ளவேணுமாயிற்று. இவ்விஷயம் வைஷ்ணவஸம்பிரதாயத்தில், பகவத்பக்தியற்ற பிராமணனை சூத்திரனென்றும், பகவத்பக்தியுள்ள சூத்திரனை பிராமணனென்றும் சொல்லுகிற "न शूद्राभगवद्भक्ताः" என்கிறதுபோன்ற விடங்களில் கீழ்ச்சொல்லிய மாதிரியே தான் அர்த்தம் செய்யவேணுமென்று ஆசார்யர்களால் வ்யவஸ்தை செய்யப்பட்டிருப்பதைப் பார்த்தாலும் வெகு நன்றாக விளங்கக்கூடியது. ஆகையால் எக்காரணத்தைக்கொண்டும் ஒரு சரீரத்தில் ஜாதி உயர்ந்ததாகவோ கீழ்ப்பட்டதாகவோ மாறமுடியாதென்றும், அது ஜந்மாந்தரத்தில்தான் மாறுமென்றும் ஸித்தாந்திதமானபடியால் கீழ்ச்சொல்லிய "शूद्रयोनौ प्रजातस्य" என்கிற வசனத்தைக்கொண்டு ஜாதி கர்மஸித்தம்தான் என்றும் ஜந்மஸித்தமல்லவென்றும் ஸாதித்துவிடப்பார்ப்பது முடியாதென்றே நிச்சிதமாயிற்று.

விச்வாமித்திரருக்கு ஜாதிமாறிய விஷயம்.

இனி ஒரே சரீரத்தில் ஜாதி மாறுகிறதில்லையென்று சொன்னால், விச்வாமித்திரருக்கு, க்ஷத்திரிய ஜாதி மாறி பிராமண்ணியம் உண்டானதாகச் சொல்லப்பட்டிருப்பதற்கு என்ன ஸமாதானமென்று கேழ்க்கலாம். இதற்குப் பதில் புதிதாக நாம் ஒன்றும் சொல்லத்தேவையில்லை. எந்தப் புராணத்தில் விச்வாமித்திரருக்கு ஜாதி மாறியதாகச் சொல்லப்பட்டிருக்கிறதோ அதே புராணத்தில் விச்வாமித்திரருக்கு வாஸ்தவமான ஜாதி யென்னவென்பதும் மற்ற விவரமும் வெகு தெளிவாகச் சொல்லப்பட்டேயிருக்கிறது. தர்ம புத்திரன் பீஷ்மாசாரியரிடம் பல விஷயங்களைக் கேட்டுக்கொண்டு வரும்போது „பிராமண்ணியமானது ஒரு சரீரத்தில், கீழ் வர்ணத்தினரால் அடையமுடியா" தென்று பீஷ்மர் சொல்லியதைக் கேட்டுவிட்டு.

ब्राह्मण्यं यदि दुष्प्रापं त्रिभिर्वर्णैर्नराधिप ।
कथं प्राप्तं महाराज क्षत्रियेण महात्मना ॥

विश्वामित्रेण धर्मात्मन् ब्राह्मणत्वं नरर्षभ ।
श्रोतुमिच्छामि तत्वेन तन्मे ब्रूहि पितामह ॥

என்பதால் ,,கீழ் மூன்று வர்ணத்தினராலும் ஒரே ஜந்மத்தில் பிராமண்ணியம் அடைய முடியாதென்றால், க்ஷத்திரியராகிய விச்வாமித்திரர் எபபடி பிராமண்ணியத்தை அடைந்தாரென்பதைத் தாங்கள் சொல்லவேணு''மென்று தர்ம புத்திரர் கேழ்க்கவே விச்வாமித்திரருடைய வாஸ்தவமான ஜாதி முதலியவைகளை பீஷ்மர் விஸ்தாரமாகச் சொல்லியிருக்கிறார். இவ்விஷயம் மஹாபாரதம் ஆநுசாஸநிகபர்வம், 3-4-அத்யாயங்களில் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதிலிருந்து விச்வாமித்திரர் க்ஷத்திரியரில்லையென்று எளிதாக அறிய முடியும். ரிசீகர் என்கிற பிராமண ரிஷியின் பார்யையும், காதி என்கிற க்ஷத்திரியனின் பார்யையும், ஆண் குழந்தைகளை அடைய விரும்பி ஓர் மஹர்ஷியிடமிருந்து திவ்ய பாயஸத்தை வரனாகப்பெற்று அதை உள்கொள்ளும்போது ஒருவருக்கொருவர் பாயஸத்தை மாற்றி உபயோகித்துவிட்டார்கள். இதனால் ரிசீகரென்கிற பிராமணருக்குப் பிறக்கவேண்டிய விச்வாமித்திரர் க்ஷத்திரியராகிய காதிக்குப் பிறக்கவும், காதிக்கிப் பிறக்கவேண்டிய க்ஷத்திரியக்குழந்தை ரிசீகருக்குமாக மாறிப்போய்விட்டது. இதனால் விச்வாமித்திரருடைய பீஜம் பிராமணபீஜம்தானென்றும் அதுதவிறுதலால் க்ஷத்திரிய ஸ்திரீயின் கர்ப்பத்தில் இருக்க நேரிட்டதென்றும், இப்படித் தவிறுதலால் க்ஷத்திரிய கர்ப்பத்தில் வசிக்க நேரிட்ட தோஷத்தையே அவர் தபஸினால் ஸமாதானம் செய்துகொண்டு தனது பீஜ ஜாதியாக பிராமண்ணியத்தை அடைந்தாரென்றும், ஆகையால் விச்வாமித்திரர் க்ஷத்திரியபீஜம் அல்லவென்றும், அவர் பிராமண்ணியத்தை அடைந்தது நியாயந்தானென்றும் பீஷ்மாசாரியர் ஸமாதானம் சொல்லிவிட்டார். ஆகையால் எந்த புராணங்களிலிருந்து விச்வாமித்திரர் ஜாதியை மாற்றிக்கொண்டதாக நாம் தெரிந்து கொண்டோமோ அந்தப் புராணங்களிலேயே விச்வாமித்திரர் பிராமணர்தானென்பதும், பாயஸ வித்யாஸத்தால்

க்ஷத்திரிய யோநியில் அவர் பிறக்க நேரிட்டதென்பதும் ஸ்பஷ்டமாயிருக்கிறபடியால் ஜாதி மாறிவிடுமென்பதற்கு விச்வாமித்திரை உதாஹரணமாகக் காட்டப் பார்ப்பது அஸங்கதமென்றே ஏற்படுகிறது. தவிரவும் விச்வாமித்திரர் மறைந்திருந்த தனது பிராமண்ணியத்தை யடைவதற்காகப் பட்ட பாட்டை நம் பூர்வபக்ஷிகள் கவனிக்கவேண்டாமா? அதற்காக அவர்செய்த தவமென்ன? ஒரு ஆயிரமல்ல இரண்டாயிரமல்ல எவ்வளவோ ஆயிர வர்ஷகாலம் தவம் செய்தார். ஆஹாரத்தை அடியோடு விலக்கி விட்டார். மழையிலும், காற்றிலும், வெய்யலிலும், சரீரத்தை அலக்ஷியமாகப் பரிகொடுத்தார். சரீரம் மெலிந்தது. கடைசியாக சுவாஸம் விடுவதும் நிறுத்தப்பட்டது. இதனுல் உலகமே நடுங்கிற்று. வேறு தேவலோகத்தையும் ஸிருஷ்டிக்கத்தொடங்கினுர். கடைசியாக இவருடைய தபோக்நியை ஸஹியாமல் பிரம்மாதி தேவர் பிரத்யக்ஷமாகி பிராமணனென்று ஒத்துக்கொண்டார்கள். இம்மாதிரி எவ்வளவோ கிலேசங்களை யனுபவித்துத் தனது ஜந்ம ஸித்த ஜாதியை யடைந்ததாகச் சொல்லப்படுகிறது. மஹான்களே! இக்காலத்திலும் ஒருவர் விச்வாமித்திரரைப்போல், உலகம் நடுங்கும்படியான அதிமானுஷ கர்மங்களைச்செய்கிறவராயும் அதி பயங்கரமான தபச்சக்தி வாய்ந்தவராயும், பிரம்மாதிதேவர்களுடைய பிரஸாதத்தால் பிராமண்ணியத்தைப் பெற்றவராயும், உலகிலிருப்பாராகுல் அவரை எவ்வித ஆக்ஷேபமன்றியும், பிராமணனென்று சொல்லுவதற்கு சாஸ்திரமாவது பொதுஜனங்களாவது சிறிதுகூடப் பின் வாங்கமாட்டார்களென்றே சொல்லுவோம். அப்படியின்றி தான்தோன்றியாக ஏதாவது இரண்டொரு புத்தகங்களைப் படித்துவிட்டு அதனடியாக ஏற்பட்ட ஞானுபாஸத்தை வைத்துக்கொண்டு, தன்னைத்தானே பிரஹஸ்பதியாக மதித்து "இவ்வளவு ஞானம் பொருந்திய நாம் ஏன் பிராமணுகக் கூடாது" என்று நாற்காலியின்மீது உட்க்கார்ந்து கொண்டபடியே லகுவாக பிராமண்ணியத்தை ஸம்பாதித்துவிடலாமென்று பகற்கனவுகாணும் நம் ஸஹோதரர்களுக்கு இந்த

விச்வாமித்திரசரித்திரமே ஒரு பயங்கரமான கோடரியாக நிற்பதை அவர்கள் ஏன் அறியவில்லையோ! அந்தோ! இவர்களின் அபிப்பிராயப்படி பிராமண்ணியம் வெகு லகுவாக கிடைத்துவிடக்கூடுமானல் விச்வாமித்திரர் ஏன் இவ்வளவு ஆயிரம்காலம் தவம் செய்யவேண்டும்? பயங்கரமான சரீரகிலேசத்தை ஏன் செய்துகொள்ளவேணும்? லகுவாக பிராமண்ணியத்தை யடையக்கூடிய ஞானம் முதலிய குணங்கள் அவரிடம் குடிகொண்டிருக்கவில்லையா? ஆகையாலிந்த விச்வாமித்ரஉபாக்யானமே நமது பூர்வபக்ஷிகளின் ஸித்தாந்தத்திற்கு நேர் விருத்தமாயிருப்பதைப் பார்த்தபிறகாவது அவர்கள் தங்களது துர்வாதத்தை விட்டுவிடுவார்களா?

முன்னோர்களுடைய துராசாரத்தை நாமும் அனுஷ்டிக்கக்கூடாது.

இதன் பிறகு இங்கு முக்கியமானதோர் விஷயம் நமது சாஸ்திரங்களில் வற்புறுத்தப்பட்டிருப்பதை பூர்வபக்ஷிகளுக்கு எடுத்துக்காட்டவேண்டியது அவசியமாயிருக்கிறது. அதை வெளிப்படுத்துவதால் அநேக ஆக்ஷேபங்களுக்குத் தகுந்த பதில் அளிக்கப்பட்டதாகும். அதாவது, இக்காலத்தில் ஏதாவது துராசாரத்தை யொருவன் செய்ய ஆசைகொள்ளும்போது, முன்காலத்தில் தேவதைகளோ, அல்லது மஹர்ஷிகளோ இம்மாதிரி துராசாரத்தைச் செய்திருப்பதை உதாஹரணமாகக் காட்டித் தானும் பிறரும் அம்மாதிரி செய்யலாமென்று நினைத்துவிடுகிறன். இது மிகவும் தவிறு. சுருதிஸ்மிருதிமுதலிய பிரமாணங்களுக்கு கட்டுப்பட்ட நாம் மேற்படி பிரமாணங்களில் சொல்லப்பட்ட விதிகளைமட்டும் அநுஸரித்து நடக்க பாத்தியப்பட்டவர்களேயன்றி முன்னோர்களுடைய அநுஷ்டானத்தையே பிரதானமாகக் கைகொள்ளக்கூடாது. ஆனல் முன்னோர்களான ரிஷிகளுடைய அநுஷ்டானமானது மேற்படி பிரமாணங்களுக்கு விரோதமில்லாததாயிருந்தால் மட்டும் நாமும் அதையநுஸரிக்கலாமேயன்றி முன்னோர்களுடைய ஆசாரம் சாஸ்திரவிருத்தமானதாயிருந்தால்

அதை நாம் தள்ளிவிடவேண்டியது தான். அதாவது சாஸ்திர விருத்தமான காரியத்தை ரிஷிகள் எக்காரணத்தைக்கொண்டு செய்திருந்தாலும் நாம் அதை அநுஸரிக்கக் கூடாதென்பது சாஸ்திரமர்யாதை. இதைப்பற்றி போதாயனர் சொல்லுவதை கவனிக்கவேணும்.

अनुष्ठितन्तु यद्देवैर्मुनिभिर्यदनुष्ठितम् ।
नानुष्ठेयं मनुष्यैस्तदुक्तं कर्म समाचरेत् ॥

என்று சொல்லப்பட்டது. அதாவது "தேவதைகளாலும் ரிஷிகளாலும் எது அநுஷ்டிக்கப்பட்டாலும், அதை ஸாதாரணமனிதர்கள் அநுஷ்டிக்கக் கூடாது. ஆனால் விதிநிஷேதசாஸ்திரங்களை யநுஸரித்துத் தான் அவர்கள் நடக்கக்கடமைப் பட்டவர்கள்" என்று சொல்லி, தபோமஹிமைவாய்ந்த முன்னோர்கள் செய்த காரியத்தை நாமும் செய்யக்கூடாதென்று தடுத்தார். இதற்குக் காரணத்தை நாம் ஊஹித்துக்கொள்ளலாம். முன்னோர்களான ரிஷிகள் ஆச்சரியமான தபச்சக்தி வாய்ந்தவர்களாகையாலும், அதன் மஹிமையைக்கொண்டு உலகம் நடுங்கும்படியாகவும், ஆச்சரியப்படும்படியாகவும் பல அதிமானுஷமான கர்மங்களைச்செய்யக்கூடியவர்களாகையாலும், நமக்காகமட்டும் ஏறபட்ட ஸ்மிருதி முதலிய விதிகள் அவர்களை கட்டுப்படுத்தாதாகையாலும், நல்லதோ கெட்டதோ அவர்களின் மனதில் தோன்றியபடி ஒன்றை செய்யவும், அதை தபோமஹிமையால் ஸமாதானம் செய்துகொள்ளவும் அவர்களுக்கு ஈச்வரநியமனத்தால் சக்தியுண்டு. அதனாலேயே அவர்கள் ஏதாவது ஸாஹஸமான காரியத்தைச் செய்யத்துணிவுகொள்வார்கள். அதைப்பார்த்து நம்போன்ற அல்பசக்தியுள்ளவரும் அதைச் செய்யக்கூடாதென்பதுதான் கீழ்சொல்லிய போதாயன வசநத்தின் ஸ்பஷ்டமான தாத்பரியமாகும். இவ்விஷயங்களை ஆபஸ்தம்பர் வெகு தெளிவாகச் சொல்லியிருப்பதையும் இங்கு குறிப்பிடலாம். அதாவது:—

दृष्टोधर्मव्यतिक्रमस्साहसञ्च पूर्वेषाम् ॥ २-६-७.
तेषान्तेजोविशेषेण प्रत्यवायो न विद्यते ॥ २-६-८.

तदन्वीक्ष्यप्रयुञ्जानस्सीदत्यवरः ॥ २-६-९.

என்கிற மூன்று ஸூத்திரங்களிலும் ''முன்னிருந்த ரிஷிகளிடம், தர்மததை மீறி நடக்கும் தன்மையும், பல ஸாஹஸகாரியங்களும் காணப்படுகிறது. (1) ஆயினும் அவர்கள் மகா தேஜஸ்விகளும் தபஸ்விகளுமாகையால் அதனுல் அவர்களுக்கு தோஷமில்லை. (2) அதைப்பார்த்து நம்போன்ற கீழ்ப்பட்டவர்களும் ஸாஹஸத்தைச் செய்தால் அநர்த்தமுண்டாகும். ஆகையால் அது கூடாது. (3)" என்று வெகு நன்ருகச்சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதமானதோர் வ்யவஸ்தையை சாஸ்திரங்கள் செய்யாமல்போனுல் பிற்காலத்தில்ப் பல அநர்த்தங்கள் நிச்சயமாக உண்டாகக்கூடும். பராசர மஹர்ஷி எங்கேயோ போய்க்கொண்டிருக்கையில் ஓர் வலையன் வீட்டிலிருந்த ராஜகுமாரியிடம் காமங்கொண்டதாகச் சொல்லப்படுகிறது. மற்றொரு ரிஷி தன்து பிதாவினுடைய வார்த்தயை முன்னிட்டுப் பெற்ற தாயைக் கொன்றுபோட்டதாக உபாக்யானமுண்டு. ஒரு பிராமணஸ்திரீ சாஸ்திரவிதிப்படி விஹித காலங்களில் விவாஹாதி ஸம்ஸ்காரங்களைப் பெறுமல், கடைசியாக நாரதருடைய உபதேசத்தால் கிழத்தனம் வந்த பிறகு விவாஹம் செய்துகொண்டாளாம். இவ்வாறு சாஸ்திர விருத்தமான பல துராசாரங்களை முன்னோர்கள் செய்ததைப் பார்த்துவிட்டு எல்லோரும் அம்மாதிரிசெய்ய ஆரம்பித்தால் உலகமர்யாதை ஒரு க்ஷணத்தில் அழிந்துபோகத் தடையுண்டோ ? கதர, பரத்வாஜ, என்கிற இரண்டு ரிஷிகள் பார்யாவிநிமயம் செய்துகொண்டார்களாம். இந்த துராசாரத்தை நாம் இப்போது அநுஷ்டிக்கத்துணிவோமா? இதுபோல் துரௌபதியென்கிற பதிவ்ரதா சிரோமணியான ஸ்திரீக்கு ஐந்து பர்த்தாக்கள் ஏற்பட்டதாக மஹா பாரதத்தில் சொல்லப்படவில்லையா ? இந்த அநுஷ்டானத்தை உதாஹரணமாகக்கொண்டு இக்காலத்திலும் நமது ஸ்திரீகளுக்கு அநேக பர்த்தாக்களைத் தேடிக்கொடுக்க நாம் சம்மதிப்போமா ? ஒரு நாளுமில்லை. ஆகையால் இவ்வித அநர்த்தங்கள் உண்டாகாமலிருப்பதின்பொருட்டே ஆபஸ்தம்பாதிகள்

மேல் சொல்லியமாதிரி வ்யவஸ்தைசெய்து உலக மர்யாதை அழி யாமல் காப்பாற்றினுர்கள். ஆகையால் இந்த சாஸ்திர மர்யாதை யை நமது பூர்வபக்ஷிகளும் கவனித்து இனி முன்னோர்களுடைய ஆசாரத்தை எதற்கும் திருஷ்டாந்தமாகச் சொல்லாமலிருப்பார்க ளாக. முன்னோர்களுடைய ஆசாரம் சாஸ்திர ஸமமதமானதா யிருக்குமாகுல் நமக்கு அது உபாதேயந்தானென்று முன்பே சொல்லப்பட்டது.

சில ரிஷிகளின் உற்பத்திக்கு ஸமாதானம்.

இனி, இதுவரையிலும் நாம் நிரூபித்து வந்ததிலிருந்து ஏற்கனவே பூர்வபக்ஷிகள், "जातोऽन्यासस्तु कैवर्त्याः" இத்யா தியில் சில ரிஷிகளுடைய ஜன்மமானது தாழ்ந்தஜாதியில் ஏற் பட்டதாகத் தெரியவருகிறபடியால் ஜாதி ஜந்மஸித்தமல்ல வென்று வாதித்ததும் அநேகமாகப் பதில் சொல்லப்பட்டுப்போ யிற்று. மகாதபஸ்விகளான ரிஷிகளுடைய ஆசாரம் நம்மால் அநுஷ்டிக்கத்தக்கதில்லையன்றோ. இதற்கு பூர்வபக்ஷிகள் உதா ஹரித்த மேற்கண்டவசனத்திலேயே பதில ஸ்பஷ்டமாகயிருப்ப தைப் பார்க்கலாம். ரிசியசிருங்கர் என்பவர் மானிடம் பிறந்ததா கக்கூறப்படுகிறது. இதுபோல் சுகர், என்பவர் கிளியின் வயிற் றில் பிறந்ததாகவும், குசர் என்பவர் தர்பத்திலிருந்து உண்டா னதாகவும், அகஸ்தியர் குடத்தில் உண்டானதாகவும் பூர்வபக்ஷி உதாஹரித்த வசனத்தில் சொல்லப்படுகிறதல்லவா ? இது எப் படித்தகும்? மனிதன் மானிடத்திலும் கிளியினிடத்திலும் தர் பத்திலும் காமம் கொண்டாரென்பதும் ஷை ஜந்துக்கள் மனி தனைப் பிரஸவித்தனவென்பதும் உலகத்தாரால் நம்பக்கூடியதோ. தர்பமென்கிற பில்லும் குடமும் பிரஸவிக்கும் சக்திவாய்ந்தவை களா? இப்படிச்சிறிதும் அநுபவத்திற்கு ஒத்துவராத கதைக ளை நம் பூர்வபக்ஷிகள் எப்படி நம்பினுர்கள் ? இத்தகைய முன் னோர் சரித்திரங்களை யாதாரமாகக்கொண்டு இக்காலத்திலும் ம னிதர்கள் திர்யக்ஜந்துக்களிடம் காமம் கொள்ளலாமென்று கூட பூர்வபக்ஷிகள் ஸாதிக்க முன்வருவார்கள்போலும் ! ஆகையால்

ரிஷிகள் மஹாதபச்சக்திவாய்ந்தவர்களென்றும், அவர்கள் அதிமானுஷமான ஆச்சரியங்களைத் தங்களிஷ்டப்படி செய்ய உரிமை பெற்றவர்களென்றும், அவர்களது கார்யத்தை இக்காலத்திய நாம் செய்ய இயலாதென்றும் ஒப்புக்கொள்ளாதவரையில் பூர்வபக்ஷிகள் சொல்லிய பிரமாணத்தை ஆற்றில் கட்டிவிடவேண்டியதுதான். ஆனால் மான்வயிற்றிலும் கிளியிடத்திலும் ரிஷிகள் உண்டானதாகச் சொல்லப்படுவதின் தத்வத்தைப் புராணங்களிலிருந்து நாம் சுலபமாகத் தெரிந்துகொள்ளலாம். தபோநிஷ்டர்களான மஹார்ஷிகள் திடீரென்று ஒருஸமயத்தில் நினைத்துக்கொண்டு ,,இப்போது நமது பீஜம் வெளிப்படுமாகில் மஹாதேஜஸ்வியான புருஷன் உண்டாகக்கூடும். ஆகையால் இதை தரிப்பவர்கள் யாராவதுண்டோ'' வெனத்தேடுவார்கள். அப்போது கிடைக்கும் க்ஷேத்திரமானது எந்த ஜாதியாயிருப்பினும் அதை கவனிக்காமல் அங்கே தங்களுடைய பீஜத்தைப் போட்டுவிட்டுப் போய்விடுவார்கள். ஒருவரும் கிடைக்காவிட்டால் தரையிலோ, நீரிலோ, மலையிலோ, வேறு எங்கேயோ அந்த பீஜத்தைப் போட்டுவிடுவார்கள். அப்படி கிடக்கும் பீஜத்தை எந்தஜாதிபிராணி யுள்கொண்டபோதிலும் அங்கிருந்து மஹாதேஜஸ்வியான புருஷனாக அந்த ரிஷிபீஜம் வெளியாகிவிடும். இதுதான் கிளியினிடமும், மானிடமும் பிறந்தாகச்சொல்லப்படுவதிலிருக்கும் ரஹஸ்யமாகும். இங்கு கிளியிடம் பிறந்தவர் கிளிபோல் பறந்துகொண்டிருக்கவில்லை. மான் வயிற்றில் பிறந்தவர் நான்குகால்களுடன் மிருகரூபமாயிருக்கவில்லை. இதற்கென்ன காரணம்? ரிஷிபீஜம் மிகுந்த சக்திவாய்ந்ததென்றும், அது எங்கு ஸம்பந்தப்பட்டாலும் அதன் குணம் குன்றுவதில்லையென்பதுமே அதற்கு காரணம். இதனாலேயே அது யோநிஸம்பந்தமில்லாமலே குடம், தர்பம் இவைகளில் கூட பலித்துவிடுகிறது. இதற்கு எவ்வித க்ஷேத்திரஸம்பந்தமன்றியே பிறந்த ஸ்ரீஸுப்ரமண்யனைக் கூட உதாஹரணமாகக் கொள்ளலாம். இத்தகைய ஆச்சரியசக்தி இக்காலத்தியவர்களுக்குண்டா? இப்படியிருக்க நாம் ரிஷிக

ளைப்போல் நடிக்கமுற்படுவது எங்ஙனம்? தவிர உபரிசரவஸு என்கிற அரசனொருவன் காமவேதனையுடன் ஆகாசவழியாகப் போய்க்கொண்டிருக்கையில் அவனது இந்திரியம் ஜலத்தில் விழவே அதை ஒரு மீன் உள்கொண்டதாகவும், அதன் வயிற்றிலிருந்து வெகு ரூபவதியான பெண் உண்டானதாகவும், அவள் மீன்பிடிப்பவர்களின் வீட்டில் வளர்ந்துவரும்போது பராசரமஹரிஷி அவளிடம் காமம் கொள்ளவே அங்கு வியாஸர் உண்டானதாகச் சொல்லப்படுகிறது. இது புராணத்தில் ஸ்பஷ்டமாகக்காணப்படுகிறது. இப்படியிருக்க, வியாஸர் வலைச்சியின் வயிற்றில் பிறந்தவரென்று சொல்லுவது அவிவேகமான வார்த்தையே யாகும்? வியாஸரின் தாய் வலையனுடைய பீஜத்திற்குப் பிறந்தவளா? வலையன் வீட்டில் அவள் வளர்ந்துவந்ததைமாத்திரம் வைத்துக்கொண்டு அவளை வலைச்சியென்று சொல்லுவது மூடத்தனமான வார்த்தையே யல்லது வேறில்லையென்று புராணநிபுணர்கள் அறியத்தக்கதே. இன்னுமிதுபோல் மற்றரிஷிகளின் உத்பத்தியைப்பற்றி புராணங்களிலிருந்தே அறிந்துகொள்ளலாம். ஆகையால் ரிஷிகளுடைய நடவடிக்கையை நாம் ஒருநாளும் பின்பற்றக்கூடாது.

ஜாதிபேதத்தால் தேசக்ஷேமத்திற்குக் கெடுதியில்லை.

தற்போது ஜாதிபேதம் தேச க்ஷேமத்திற்குத் தடையாயிருப்பதாயும், அதைத் துலைத்துவிடவேணுமென்றும் திருத்தக்காரர்கள் கூச்சலிடுவதற்கு, அவர்கள் பிறருடைய ஏமாற்றமான வார்த்தைகளை நம்பி மோசம் போனதே முக்கியகாரணமென்று நாம் தெளிவாக எடுத்துக்காட்டமுடியும். சில வர்ஷங்களுக்கு முன், இந்தியாவில் வந்து விசாரணைசெய்த "பப்ளிக் ஸர்விஸ் கமிஷன்" என்கிற விசாரணைக் கூட்டத்தார் முன் அனேக யூரோப்பியர்களும், பிராமணரல்லாதாரும் ஸாக்ஷியம் கொடுக்கும்போது பஹிரங்கமாக வெளியிட்ட அபிப்பிராயத்தை இச்சமயம் நாம் கவனிப்பது அவசியம் அங்கு ஸாக்ஷியம் கொடுத்தவர்கள் பிராமணர்களின் புத்திசக்தியைக்கண்டு வெகுவாக பயந்து இங்

தியாவில் புதிய பரீக்ஷைகளை வைத்தால் பிராமணர்களே அதிகமாகத்தேறிவிடுவார்களென்று நடுங்கிப்போய்விட்டார்கள். இப்படி எத்தேசத்தாரும் கண்டு அதிசயிக்கும்படியான புத்திசக்தி பிராமணர்களுக்கிருப்பதை அழிக்கவேணுமானால் ஜாதிகலப்பு விவாஹங்கள் மூலமாக பிராமணாதி ஜாதியை அழித்து ஸங்கர ஜாதிமயமாக இந்தியாவை நிறப்பிவிட்டால் பிராமணர்களின் கொழுப்பும் அநேகமாக அடங்கிவிடக்கூடுமென்கிற கெட்ட எண்ணத்தினாலேயே ஜாதிபேதம் கூடாது, ஜாதிபேதம் கூடாதென்று கூச்சலிடப்படுகிறது. ஜாதிபேதம் கூடாதென்று சொல்லுகிறவர்களுக்கு "பிராமணஜாதி இருக்கக்கூடா"தென்பதுதான் முக்கியமான உள்நோக்கமென்பதை விவேகிகள் அறியாமல் இருக்கமாட்டார்கள். இதுபோல் இந்தியாவிலும் இங்கிலாந்திலுமுள்ள சில இந்தியவிரோதிகள், இந்தியாவில் ஜாதிபேதமிருப்பதால் அதற்கு ஸ்வராஜ்யம் முதலிய ஸ்வாதந்தரியங்களைக் கொடுக்கக்கூடாதென்று வாதித்துவருவது யாவருமறிந்தவிஷயம். இந்த உண்மையற்றவாதத்தைக் கேட்டு நம் திருத்தக்காரர்களும் ஏமாந்துபோய்விட்டதைப்பற்றி நாம் துக்கிக்கவேணும். ஜாதிபேதமென்பது மதஸம்பந்தமான காரியங்களை அநுஷ்டிப்பதற்குமட்டுமேற்பட்டதானபிரிவு தானாகையால் அதனால் ராஜீயவிஷயங்களுக்கு எவ்விதபாதகத்தை யுண்டுபண்ணமுடியுமென்பதைத் திருத்தக்காரர்கள் நன்கு யோசிக்கவேணும். முற்காலங்களில் ஜாதிக்கட்டுப்பாடுகள் இப்போது இருப்பதைப்போல் சீர்குலைந்து போகாமல் வெகு கண்டிப்பாக இருந்த சமயங்களில் கூட ஒவ்வொரு ஜாதியரும் எவ்விதவிரோதமுமில்லாமல் ராஜீயவிஷயங்களில் ஒற்றுமையுடன் வாழ்ந்து வந்ததாகவே ஸ்ரீராமாயணாதி சரித்திரங்களிலிருந்து வெளியாகிறது. தசரதசக்ரவர்த்தி ஸ்ரீராமனுக்கு யௌவராஜ்யாபிஷேகத்தைச் செய்ய விருப்பமுள்ளவனாயிருந்தும் பொது ஜனங்களின் அபிப்பிராயத்தை யநுஸரித்தே நடக்கவேணுமென்று எண்ணி அதற்காகப் பெரியதோர் ஸபையைக்கூட்டினான். அச்சபையில் வஸிஷ்ட, வாமதேவாதி பிராமணர்களும், அநேக க்ஷத்திரிய வைசிய சூத்திராதிகளும் எவ்

வித ஜாதி பக்ஷபாதமன்றியும் அரசனுல் அழைக்கப்பட்டுக் கூடியிருந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இம்மட்டுமா? வர்ணுச்சிரமதர்மங்களுக்குக் கட்டுப்படாத அநேக மிலேச்சஜாதியர்களும் கூட ஸபையில் வந்து கூடியிருந்ததாக "म्लेच्छाचार्याश्च येकेचित्" என்று சொல்லப்பட்டிருக்கிறது. தசரதரும் தனது அபிப்பிராயத்தைச் சொல்லிவிட்டு "यद्यप्येषा मम प्रीतिः" என்று என்னுடைய தாக்ஷிண்யத்திற்காக யோசிக்காமல் உங்களுடைய அபிப்ராயத்தைச்சொல்லுங்களென்று கேழ்க்கவே, பொதுஜனங்கள் யாவரும் தனித்துக்கூடி யாலோசித்து ஒற்றுமையுடன் தசரதருடைய அபிப்ராயத்தையே தாங்கள் மெச்சுவதாகச் சொல்லியிருப்பதை "समेत्यमन्त्रयित्वाते समतागतबुद्धयः" என்பதில் நன்ருகப்பார்க்கலாம். இதிலிருந்து நாம் முற்காலத்தில் ஜனங்களின் அபிப்பிராயப்படியே ராஜ்யதந்திரங்கள் நடந்தனவென்றும், அப்படி அபிப்பிராயம் சொல்லுவதில் எவ்வித ஜாதிபேதமன்றியும் யாவரும் ஒற்றுமையுடனிருந்தார்களென்றும் நன்ருக அறியக்கூடியது. தசரதருடைய ஸபையில் மிலேச்சர்களும் மற்ற சூத்திராதிவர்ணத்தினரும் வந்திருப்பதைப் பார்த்து வஸிஷ்டாதி பிராமணர்கள் ஓடிப்போய்விடவில்லை. அதுபோல் பிராமணர்களிடம் அஸூயையால் மற்றஜாதியாரும் ஸபையைவிட்டுப் போய்விடவில்லை. இதை யூன்றிப்பார்த்தால் முன்காலத்தில் ஜாதிபேதங்கள் இருந்தும் அதனுல் ராஜ்யகாரியங்களுக்கு எவ்விதபாதகமும் விளைந்துவிடவில்லையென்பதைத் திருத்தக்காரர்கள் அறியவேணும். தசரதன் காலத்திற்குப் பிறகும் அதாவது கி. பி 1200ம் ஆண்டுவரையிலும் நம் தேசமானது ஸ்வராஜ்யமனுபவித்து வந்ததாகவே சரித்திரமும் கூறுகிறது. அக்காலங்களிலும் ஜாதிபேதங்கள் இருந்துவந்தனவென்றே நீங்களும் ஒப்புக்கொள்ளுகிறீர்கள். மஹமதியர்கள் பார்ஸிக்காரர்களிடமிருந்து தேசத்தைக் கைபற்றினுர்களல்லவா? பார்ஸிகளுக்குள் எவ்விதஜாதிபேதமுமில்லாமலிருக்க அவர்கள் ஏன் தேசத்தை இழந்தார்? இதுபோல் துருக்கி, துருக்கிஸ்தானம், வடஆபிரிக்கா, ஸ்பெயின்போன்ற தேசங்களனைத்தும் எவ்வித

ஜாதிபேதமுமற்றிருந்தும் தங்களது தேசத்தை மஹம்மதியரி டம் இழந்துவிட்டார்கள். போலண்டுதேசத்தில் ஒரேஜாதியார் வசித்துவந்தும் அது மூன்று அரசர்களின் படையெடுப்புநிமித்த மாக அவர்கள் வசமாகி சூறையடிக்கப்படவில்லையா? இங்கெல் லாம் எந்த ஜாதிபேதம் இவ்வளவு அநர்த்தங்களுக்கு காரணமா யிருந்தது சொல்லுங்கள். ஸ்ரீமான் மாளவியா அவர் எழுதிய தொழில் கமிஷன் ரிபோர்ட்டில், நம் தேசமானது 16-வது நா ற்றுண்டுவரையிலும், கைத்தொழில் வியாபாராதிகளில் முதன் மைபெற்று, பொருளால் மேலிட்டு வெகு புஷ்டியுடன் இருந்த தாகத் தக்க ஆதாரங்களுடன் சொல்லியிருக்கிறுர். அக்காலத் தில் ஜாதிபேதமில்லையா? அப்படியிருந்தும் தேசம் க்ஷேமத்தை அடையவில்லையா? ஸமீபத்தில் ஸ்ரீமான் சங்கரன் நாயர் அவர் கள் சீர் திருத்தங்கள் ஸம்பந்தமாய் எழுதியுள்ள மேன்மையான குறிப்புகளில் இந்தியர்கள் வெகுகாலமாகவே ஜனநாயகஆக்ஷி யில் வாழ்ந்துவருவதாகப் பல ஆதாரங்களுடன் வெளியிட்டிருக் கிறுர். அக்காலங்களில் ஜாதிபேதங்கிடையாதா? ஹிந்துக்கள் மத்யஏஷியாவிலிருந்து வந்தகாலம் முதல் ஜாதிபேதமிருந்துவரு வதாக நீங்கள் நம்பும் சரித்திரங்கள் கூடக்கூறவில்லையா? அத ற்கு முன்னிருந்த ஈரானியர் என்கிற அஸுரோபாஸ்திக்காரர் கள் காலத்தில்கூட ஒருமாதிரியாக ஜாதிபேதமிருந்ததாகவே ச ரித்திரநிபுணர்கள் சொல்லக்கேட்டிருக்கிறேம். இப்படியெல் லாம் ஏராளமான ஆதாரத்துடன் விமர்சித்துப்பார்த்தாலும் ஜாதி பேதத்திற்கும் ராஜ்ய க்ஷேமத்திற்கும் எவ்வித ஸம்பந்தமுமில் லையென்பது விளங்கும். இனி ஜாதி பேதமற்ற தேசங்கள் எல் லாம் கலகமும், சச்சரவுமன்றி ஐகமத்யத்துடன் வாழ்ந்துவருகின் றனவோ! மதத்தையும், வேறு பலகாரணங்களையும் முன்னிட் டு மேல் நாட்டு ஜனங்கள் ஒருவருக்கொருவர், வெட்டிக்கொள் ளுவதையும், குத்திக்கொள்ளுவதையும் பிரதிதினமும் பத்திரி கைகளில் பார்க்காதவருமுண்டோ? இப்படியிருந்தும் அங்கெல் லாம் ஸ்வராஜ்ஜியம் நடைபெறவில்லையோ? இது நிற்க, அயர்லா ந்து தேசத்தைப்பற்றி நீங்கள் என்னபதில் சொல்லுவீர்கள்? நம்

தேசத்தில்தான் ஜாதிபேத ஸங்கடத்தால் ஸ்வராஜ்ஜியம் கிடைக்கவில்லை ! ! அயர்லாந்து தேசமானது எவ்வளவோ வருஷங்களாகப் பலமான பிரயத்நங்கள் செய்தும் நாளது வரையில் ஸ்வராஜ்ஜியம் அடையாததற்குக் காரணமென்ன ? நம் தேசத்தைப்போல் அங்கு ஸ்வல்பமாவது ஜாதிபேதமுண்டா ? எல்லோரும் ஒரேமதத்தினர் ஒரே பாஷை பேசுகிறவர்கள். தற்கால நாகரீகங்களில் மற்ற தேசத்தாரை விடச்சிறிதும் சளைக்காதவர்கள். வெள்ளைநிறமுள்ளவர்கள். பார்லிமெண்டிலும் மற்ற விடத்திலும் விசேஷச் செல்வாக்கு பெற்றவர்கள். இப்படியெல்லாம் எவ்வளவோ விதத்திலும் மேன்மைபெற்றதேசமாயிருந்தும் அயர்லாந்து இன்னமும் ஸ்வராஜ்ஜியத்திற்கு நம்மைப்போல் இரவும் பகலும் தபஸ் செய்யும்படி இருப்பது என்? இதன் தத்வத்தை நன்கு அறிந்த புத்திமான்கள் நம்தேச முன்னேற்றத்திற்கு ஜாதிபேதத்தின் தலையில் வீண் பழியை சுமத்தத் துணியமாட்டார்களென்றே சொல்லுவோம். ஆனல் முன்காலங்களில் ஒற்றுமையுடனிந்த ஜாதிகளுக்குள் தற்காலம் பரஸ்பரத்வேஷம் அதிகரித்து வருகிறதற்குக் காரணத்தை எளிதாகக்கண்டுபிடித்துவிடலாம். பண்டித மாளவியாமுதலியவர்கள் சொல்லியபடி முன்காலங்களில் நமது தேசம் மிகுந்த செல்வமுள்ளதாயிருந்ததுபோய் தத்காலம் நமது தேசதிரவியங்கள் ஒவ்வொருநாளும் நதீப்ரவாஹம்போல் மேற்குமுகமாயோடி தேசாந்தரங்களில் குவிந்துவிடவே நம்மவர்கள் ஜீவனமற்றுப் பொருளற்றுச் செல்வமற்று, ஜாதிவிவஹாரங்களில் புகுந்துவிட நேர்ந்ததென்பதே விவேகிகள் கண்டறிந்த ஸூக்ஷ்மமான காரணமாகும். இதற்கு தேசத்தின் தரித்ரநிலை தீரவேண்டுமேயல்லது ஜாதியை அழிப்பதால் எவ்வித பிரயோஜனமும் கிடைக்காது. வாஸ்தவமிப்படியிருக்க நம்மிடம் அதிக ஸ்வாதந்திரியத்தைக் கொடுக்க மனமில்லாதயாரோ சிலபொருமைக்காரர்களுடைய வஞ்சனை வார்த்தையை வாஸ்தவமெனக்கருதி ஏமாந்து நம் திருத்தக்காரர் ஜாதியின்மேல் கோபங்கொண்டு கோடரியால் அதை வெட்டப்பார்ப்பது விவேகமற்றகாரியமென்றே சொல்லுவோம். ஆகையால் திருத்தக்காரர்கள் இத்துர்வாதங்களைவிட்டு நல்வழிப்படவேணுமென்று ஈசனைபிரார்த்திப்போம்.

அக்னிஹோத்திரம்,

பண்டித கோபாலதேசிகாசாரியர்.